# சத்திய வேத பாதுகாவலன்

Telegram "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆனி மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 22-ம் இலக்கம்

# தொண்ணூற்றொரு அடி உயரமான கிறீஸ்து இராசா சுரூபம்

## போர்த்துக்கால் தனது உறுதி வாக்கை நிறைவேற்றியது

*1940*-ம் ஆண்டு — அதாவது இற்றைக்குப் 19 வருடங்களின் முன் போர்த்துக்கால்தேசமக்கள் பெயரால் அத்தேச அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் ஒன்றுசேர்ந்து சர்வேசுரனுக்கு வாக்குத்தத்தம் ஒன்று செய்திருந்தார்கள். அந்தவாக்குத்தத்தம் — அதாவது போர்த்துக்கால்தேசம் யுத்தபயங்கரங்களிலிருந்து தவிர்க்கப்படுமானல் கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூபம்ஒன்றைப் பகிரங்கமாக ஸ்தாபிப்பதாகச் செய்துகொண்டவாக்குத்தத்தம் இப்பொழுது நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன்நகருக்கு மேலாகக் காட்சியளிப்பதும், ராகுஸ் நதியின் தென்கரையோரமாகவுள்ள அல்மாடாகுன்றின் மேல் நிலவுவதுமான பிரமாண்டமான ஓர் திருச்சுரூபத்தின் அடியில் நின்றுகொண்டு லிஸ்பன்நகர பத்திறியாக்குவான கருதினல் செறெஜெய்ரு ஆண்டவர் சென்றவைகாசிமாதம் *17*-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அர்ப்பணஞ் செய்யும் வார்த்தைகளை உச்சரித்தகணத்திலேயே அந்தவாக்குத்தத்தம் பூர்த்திசெய்யப்படலாயிற்று.

### லூஸியாவின் தீர்க்கதரிசனம்

யுத்தம்முடிவடைந்ததும் போர்த்துக்காலின் அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் தாங்கள்கொடுத்த உறுதிவாக்கை நிறைவேற்றிவைக்கத் தொடங்கினர்கள். இந்தச்சுரூபம் மிகப்பிரமாண்டமான அளவிலே ஸ்தாபிக்கத் திட்டஞ் செய்யப்பட்டது. அதாவது *226* அடி உயரமுடைய ஆதாரபீடம் ஒன்றின்மீது கரங்கள்இரண்டும் நீட்டியபடியுள்ள *91* அடிஉயரமான கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூபம் ஒன்றை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அத்திவாரக்கல் *1950*-ம்ஆண்டு கருதினல் செறெஜெய்ரு ஆண்டவரால் நாட்டப்பட்டது.

அத்திரு வைபவத்தின்போது, பாத்திமாவிலே தேவதாயார் *1917*-ம் ஆண்டு காட்சியளித்த மூன்றுபிள்ளைகளில் இன்னும் உயிர் வாழ்ந்திருப்பவளும், கார்மேல் கன்னிகாசபையைச் சேர்ந்தவளுமான சங். லூசியாகன்னியாஸ்திரியால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம்ஒன்றைக் கருதினல்ஆண்டவர் வெளியிடலாயினர். அதாவது — போர்த்துக்கால் யுத்தத்தில்சிக்காது தவிர்க்கப்படும்; ஏனெனில், அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் அத்தேசத்தை *1931*-ம்ஆண்டு மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நேர்ந்து ஒப்புக்கொடுத்திருந்தார்களென்று லூஸியா கன்னியாஸ்திரி முன்னதாகவே அறிவித்திருந்தாள்என்பதே.

### யுத்தகால வாக்குத்தத்தம்

அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவைபவங்களுக்கு ஐந்துலட்சம் மக்களுக்கு மேல் சமுகமளித்திருந்தார்கள். போர்த்துக்கேய மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்சகலரும் பிரசன்னமாயிருந்தார்கள். அவ்வாறே ஜனதிபதி தோமாஸ்அவர்களும், அரசாங்க அங்கத்தவர்களும், அநேகநாடுகளைச் சேர்ந்த இராசியப் பிரதிநிதிகளும் பிரசன்னமாய் இருந்தார்கள்.

அன்றைய திருவைபவங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தனஎன்பதின் அறிகுறியாகப் போர்த்துக்கால் முழுவதிலும், கடலுக்கப்பாலுள்ள அதன் வெளிநாடுகளிலும் ஆலயமணிகள் அடிக்கப்பட்டபோது, *6,000* மாடப்புறுக்கள் ஓர் பெருமுகில்போன்று மேலெழுந்து சென்றன. இந்தக்கொண்டாட்டங்களுடன் பாத்திமாபதி நெருங்கியவிதமாக இணைக்கப்பட்டிருந்தது. திருக்காட்சிகளின் சிற்றாலயத்தில் இருந்து வருகின்ற தேவதாயாரின் திருச்சுரூபமானது அத்திருசேத்திரத்திலிருந்து அங்கு கொண்டுவரப்படலாயிற்று. முதல்நாள் சனிக்கிழமை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அர்ச். மரியகொறெற்றி அம்மாளின் கல்லறைத் தரிசனை

[தொடர்ச்சி]

நெத்தூனேவிலே சூழ்நிலைதானும பரிசுத்தத்தின்உணர்ச்சியை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. அங்கேசகலமும் தியானத்துக்கும், செபத்துக்கும்சார்பாய் அமைந்திருக்கின்றன. நாம் திவ்வியபூசை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகளையெல்லாம் பங்குக்குரவர் பெரிதும்குதூகலத்துடன் எமக்குசெய்தார். திவ்விய பூசைநிறைவேற்றிச் சிறிதுவேளை இளைப்பாறிவிட்டு அர்ச். மரியகொறெற்றி வசித்திருந்த வீட்டைப் பார்ப்பதற்காக நெத்தூனேவிலிருந்து அதிகம் தூரமாயிராத பெறியெறெடி கொங்கா என்றசிறிய கிராமத்தைநோக்கிப் புறப்பட்டோம்.

பெறியெறெயைப்பற்றி யாதும் கூறுமுன் அர்ச். மரியகொறெற்றி பிறந்தஇடத்தையும், அவள்பெற்றோரையும்பற்றிச் சிலவார்த்தைகள் எடுத்துக்கூறுவது அதிகம் பொருத்தமாகும். லூய்ஜி கொறெற்றியினதும், அசுந்தா கொறெற்றியினதும் மூன்றுவது பிள்ளையான மரியா இத்தாலியிலே கொறினல்தோ எனுமிடத்தில் *1890*-ம்ஆண்டுஐப்பசிமாதம் *16*-ந்திகதியன்று பிறந்தாள். சில வருடங்களின்பின் இந்தவறிய குடும்பம் கொறினல்தோவிலிருந்து குடியெழும்பி நெத்தூனேவிலிருந்து ஏறக்குறைய நான்கு மைல் தூரத்திலுள்ள பெறியெறெடி கொங்காஎன்ற சிறியகிராமத்தில்போய்க் குடியேறியது. இங்கேஅவர்கள் இரண்டுமாடிக் கட்டடம்ஒன்றில் வசித்திருந்தார்கள். மேல்மாடியின அரைவாசிப் பகுதியில் கொறெற்றிகுடும்பம் வசித்துவந்தது. மற்றஅரைவாசியில் மரியாவைக் கொலைசெய்த அலெக்சாந்தரை அடக்கிய மற்றோர் குடும்பம் வசித்திருந்தது. சமையற்கூடம் இரு குடும்பங்களுக்கும் பொதுவான தொன்றாய்ப் பாவிக்கப்பட்டு வந்தது. மேற்தளத்திலிருந்து கீழே நிலத்துக்கு இறங்கிவரப் படிக்கட்டுகள் இருக்கின்றன.

இந்தப் படிக்கட்டுகளைநோக்கி மரியாவரும்போதே அலெக்சாந்தரால் அவள் தாக்கப்பட்டாள். தனது தீயநோக்கத்துக்கு அப்பெண்பிள்ளை இடந்தரமாட்டாள் எனக்கண்டஅவன் ஓர்கத்தியால் அநேகம்தடவை அவளைக்குத்திப் படுகாயப்படுத்தினன். பிராணபத்துக்குரிய நிலையில் அங்கே அவளை விட்டுச்சென்றான். அவள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். ஆனல், அங்கே அவள்குணமடைவாளென்ற நம்பிக்கை காணப்படவில்லை. ஆஸ்பத்திரி விசாரணைக்குரவர்வந்து அவளுக்குக் கடைசி நன்மைகொடுத்து, அவஸ்தைப் பூசுதல்செய்தார். இந்தத்தேவதிரவிய அனுமானங்களை அவர்நிறைவேற்றுமுன் மரியாவைநோக்கி: தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்கும், நல்லகள்வனுக்கும் திவ்வியயேசு மன்னிப்பருளியது போல, உனது கொலைபாதகனை அலெக்சாந்தருக்கும் மன்னிப்பருள விரும்புகிறயோவென்று அவளைக்கேட்டார். தான் அலெக்சாந்தரை மன்னித்துவிட்டதாகவும், பரகதியில் தனக்குச் சமீபமாக அவனைக்காண ஆசிப்பதாகவும் மரியாபதிலளித்தாள். அதன்மேல் அதிகம் மனச்சமாதானமாய்க் கடைசிமூச்சு விட்டு மரணத்திரையில் மறைந்தாள். அவளுடைய தூயஆன்மா கன்னிமைத்துவத்தினதும், வேதசாட்சியத்துவத்தினதும் இரட்டைக்கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தனதுதெய்வீக மணவாளரிடம் சென்றது. இதுநிகழ்ந்தது, மரியா *11*வருடமும், *9*மாதமும் மட்டுமே வயதுடையவளாயிருந்தபோது, *1902*-ம் ஆண்டு ஆடி மாதம் *6*-ந்திகதி சாயந்தரம் 3 மணிக்காகும்.

பெறியெறெயில் நாம் சிறிது வேளை செலவிடலானேம். இந்தக் கிராமமக்கள் பெரும்பான்மையும் கமக்காரரே. அர்ச். மரியகொறெற்றி தனது பெற்றோருடன் வசித்திருந்தமனை இன்று ஒரு புனிததலமாகப் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இந்தமனையிலே மரியா வேதசாட்சியான அந்தஇட

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# ஆபத்துவேளை அறிந்திருக்கவேண்டிய ஆரம்ப சிகிச்சை முறைகள்

— வசந்தா —

வீட்டிலே எவருக்காவது திடீரெனச் சுகவீனமோ அல்லது விபத்தோ ஏற்பட்டால் உடனே வைத்தியரை அழைத்துவந்து காட்டுவது நலம். ஆனால்,சிலசமயங்களில் வைத்தியரின் சேவை உடனடியாகக்கிட்டுமென நிச்சயமாகக் கூறமுடியாது. அத்தகைய வேளைகளில் நாமே சிலஆரம்ப—அதாவதுமுதற்சிகிச்சைகளைச் செய்யத் தயாராயிருக்கவேண்டும். இதற்குக் குடும்பதலைவிகளாயிருக்கும் பெண்கள் முதற்சிகிச்சைமுறைகளை அறிந்திருப்பது அத்தியாவசியமாகும்.

## நச்சுப்பொருள்கள்

சிறுகுழந்தைகள் தெரியாமல் நச்சுப்பொருட்களை உண்டுவிட்டால், வைத்தியரைக் கூட்டிக்கொண்டுவருமுன் நாம் முதற்சிகிச்சைமுறையைக் கையாளலாம். வாந்தியெடுப்பதற்காக, வெந்நீரில் ஒருபிடிஉப்புப்போட்டு நன்றாகக்கலக்கி அதைக் குடிக்கக்கொடுக்க வேண்டும். இதை உட்கொள்ளும் குழந்தை உடனேவாந்தியெடுக்கும். அப்போது குழந்தைஉட்கொண்ட நச்சுப்பொருள் வெளிவந்துவிடும்.

## வெட்டுக்காயங்கள்

சமையலறையிலே பெண்கள் காய்கறிகளை நறுக்கும்போதோ அல்லது துண்டிக்கும்போதோ கூரியகத்தி போன்ற வெட்டுக்கருவிகளால் ஏதாவதுகாயம் ஏற்பட்டுவிட்டால், பொட்டாஸியம் பெர்மாங்கனேற்றை வெந்நீரில்கலந்து, காயப்பட்டபகுதியைச் சுத்தமாகக் கழுவியபின் வெள்ளைத் துணியால் கட்டிவிடவேண்டும். பெரிய காயமாயிருந்தால், பஞ்சுவைத்துக் கட்டியபின் வைத்தியரின்உதவியை நாடுவதுநன்று

## தீக்காயங்கள்

சிலசமயங்களில் நெருப்பினாலோ அல்லது திராவகப்பொருள்களாலோ உடம்பில் எரிகாயங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. எரிகாயம் கடுமையாயில்லாவிட்டால், தோல்சற்றுச்சிவந்திருக்கும். சற்றேகடுமையான எரிகாயமாயிருந்தால் தோலில்கொப்புளங்கள் உண்டாகும். மிகக்கடுமையான எரிகாயத்தினால் தோல் வெந்துபோவதுமுண்டு. இம்மாதிரியானசமயங்களில் வெந்துபோன பகுதிக்கூடாக நச்சுக் கிருமிகள் உட்பிரவேசித்து உடம்பினுள்சென்று இரத்தத்துடன் கலந்துவிடும். ஆதலால், வெந்தபகுதியைப் பொட்டாஸியம் பெர்மாங்கனேற் கலந்த வெந்நீரில்தோய்க்கப்பட்ட மெல்லியதுணியால்கட்டி மூடிவிடவேண்டும். கண்களிலே நெருப்புப்பட்டால் சிறுகஆமணக்குஎண்ணெயை ஊற்றிக்கொள்ளலாம்.

## விளக்கு விபத்துகள்

எங்கள்நாட்டிலே அநேகசிறுமிகளும், பெண்களும் போத்தல்விளக்கு விபத்துக்களில்சிக்கிக் கொடியதுயரங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்தவிபத்துக்கள் பெரும்பாலும் கவனக்குறைவினாலேயே ஏற்படுகின்றன. வீட்டில் தனியாகஇருக்கும்பொழுதோ அல்லது போத்தல்விளக்கின் பக்கத்தில் படித்துக்கொண்டிருக்கும்பொழுதோ அல்லது சமையலறையில் வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுதோ, பாவாடை அல்லதுசேலையின் ஒருபகுதியில் நெருப்புப்பற்றிக்கொண்டால், அது பாவாடை அல்லது சேலையின் மறுபகுதிகளுக்குப் பரவாமல் தடுத்துவிடவேண்டும். இதற்கு மற்றும்பகுதிகளைச் சுருட்டிப்பிடித்துக்கொண்டு, நெருப்புப்பற்றியபகுதியை அணைத்துவிடலாம். ஆனால்,நெருப்பு மறுபகுதிகளுக்கும்பரவிச் சுவாலைவிட்டெரியத் தொடங்கிவிட்டதென்றால், உடனே அருகிலுள்ள கெட்டியானபோர்வையாலோ அல்லது கம்பளியினாலோ அல்லது சாக்கினாலோ உடம்பைச் சுற்றி மூடிக்கொண்டு, கீழேபடுத்துப் புரண்டால் நெருப்பை அணைத்துவிடமுடியும். ஆடையில் நெருப்புப்பற்றியதைக் கண்டதும், பீதியடைந்து அங்குமிங்கும்கோவென்று கதறிக்கொண்டு ஓடித்திரிவதால் நெருப்பு இன்னும் பரவுமேயன்றி அணையாது. ஏனென்றால், காற்று நெருப்பை மேலும்பரப்பிவிடும்.

## விஷப்பிராணிகள்

அரவம்போன்ற விஷசெந்துக்கள் தீண்டிவிட்டால், அவ்விஷம் இரத்தத்தில்கலந்து உடம்பெங்கும்பரவிவிடும். இது உயிருக்கே மோசத்தை உண்டுபண்ணும். விஷம் உடம்புமுழுவதும் பரவாதுதடுத்துவிட்டால், மரணஆபத்தைத் தவிர்த்துவிடலாம். விஷசெந்து கடித்தஇடத்துக்குச் சற்றுமேலே உடனடியாக ஒருகெட்டியான கயிற்றினால் இறுக்கிக்கட்டிவிட்டால் இரத்தம் மேலேசெல்லாது நின்றுவிடும். பின்னர்தைரியமாக ஒருகத்தியால் விஷசெந்து கடித்தஇடத்தைக் கீறிவிட்டால், இரத்தம்வடிந்து, விஷமும்அத்துடன் வெளிவந்துவிடும். பிறகு வெந்நீரினால் விஷசெந்து கடித்தபகுதியை நன்றாகக்கழுவி அதைச் சுட்டுவிட்டால், விஷத்தின்உபத்திரவமும், வேதனையும் நீங்கிவிடும். விஷசெந்தினால் கடிபட்டபிள்ளையோ அல்லது வளர்ந்தவரோ களைப்படைந்திருக்கக் காணப்பட்டால், கோப்பிபோன்ற சூடானபானங்களைப் பருகக்கொடுக்கலாம். ஆனால், இந்தமுதற்சிகிச்சை முடிந்ததும் உடனடியாக நோயாளியைத் தக்கவைத்தியரிடம் கொண்டுபோகவேண்டும்.

இத்தகைய முதற்சிகிச்சைமுறைகளை அறிந்திருப்பதால், எத்தனையோ கஷ்டங்களையும், துன்பங்களையும், உயிர்ஆபத்துக்களையும், நஷ்டங்களையும் தடுத்துவிடலாம். குடும்பத்துக்கே பெருநன்மைஉண்டாகும்.

---

● வரப்போகும் திருச்சபைச் சாதாரணதிருச்சங்கம் வெற்றிகரமாக நடந்தேறத்தக்கதாய்ச் சென்ற வைகாசிமாதத்திலே பாப்பாசர்சமுகத்தில் திவ்வியபூசைப்பலிகள் தினமும் ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. அப்போஸ்தலிக்கமாளிகைப் பவுலின்சிற்றாலயத்திலே வத்திக்கானின் பல்வேறுகுருசிரேஷ்டர்களாலே இந்தப்பூசைப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படலாயின.

● குடும்பசெபமாலைப் படையணியின் ஞானத்தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் பெல்ஜிய தேச புறூஜெஸ்மேற்றிராசனத்திலே தமதுபடையணியை நடத்திவருகின்றார். அம்மேற்றிராசனம் ஸ்தாபகமான 400-ம்ஆண்டுவிழாவைக் கொண்டாடுமுகமாகவே இது அங்குநடைபெறுகின்றது. அம்மேற்றிராசனத்தில் அடங்கியுள்ள பத்துலட்சம்மக்களில் நூற்றுக்குத் 99விகிதமானோரும் கத்தோலிக்கரே.

● வத்திக்கானிலே யுத்தகாலத்தில் 12-ம்பத்திநாதரிடமாக அமெரிக்க றூஸ்வெல்ற், றூமன்ஜனாதிபதிகளின் சொந்தப்பிரதிநிதியாக 1939-ம்ஆண்டுமுதல் 1946-ம்ஆண்டுவரையிலே இருந்துவந்த திரு. மைறன் டெய்லர் அவர்கள் நியூயோர்க்நகரிலே காலஞ்சென்றாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. எபிஸ்கோப்பாலியன் புரொட்டஸ்தாந்த சபையைச்சேர்ந்த இவர் 12-ம்பத்திநாதபாப்பானவரின் சமாதானமுயற்சிகளில் அவருக்குப் பேருதவியாயிருந்துவந்தார்.

# அர்ச். சூசையப்பரின் அப்போஸ்தலர் அந்திரே பிறதர்

(முன் தொடர்ச்சி)

பிறதர் அந்திரேயுடைய பிரியசிநேகிதர்ஒருவர்: "உருக்கு ஊசிக்காந்தத்தைஅவாவுவதுபோலப் பிறதர்அந்திரே சருவேசுரனை நாடுவதாகக் காணப்படுகிறார்" என்று சொல்லியுள்ளார். பலிபீடத்திலே திருப்பேழையிலே நமது மேற்கொண்ட போன்பினாலே இரவு பகலாய் எழுந்தருளியிருக்கும் தேவாதிதேவனாகிய யேசுநாதசுவாமியைத் தரிசிக்கவும், அவரோடுசெம்பாஷிக்கவும் ஆனசமயம் எப்போது வாய்க்குமோ என்று ஆவலாக எதிர்பார்த்திருப்பார். சமயம்வாய்த்ததும், தீவிரித்துப்போய்ச் சற்பிரசாதநாதர்சந்நிதியிலே நெடுமுழந்தாளிட்டுக் கைகூப்பியபடியே மெய்ம்மறந்தவராகத் தியானயோகத்தில் மூழ்கிநிற்பார்; தமது பாத்திரவீனத்தை அறிக்கையிடுவார்; பத்திக்கண்ணீர்சொரிந்து அழுவார்; பெற்ற தாயைப் பிள்ளைமன்றாடுமாறு அன்புமயமான ஆத்தும இரட்சகரை ஆராமையோடு ஆவலித்து இரந்துமன்றாடுவார். தமக்காக மாத்திரமல்ல, பிறர்க்காகவும், சர்வசாகிய சனங்களுக்காகவும், திருச்சபைத் தலைவராயுள்ள பரிசுத்தபிதாவுக்காகவும் பத்திலவராக்கியத்தோடு பரிந்துபிரார்த்திப்பார். திருப்பேழையிலே சிறைவாசிபோலே அடைபட்டிருக்கும் திவ்வியநாதர் திருச்சந்நிதானத்திலே அவர்போக்கும் நெடுநேரம் அவருக்குக் குறுநேரமாகத்தோற்றும்.

ஓர்நாள், திவ்வியநற்கருணைச் சந்நிதானத்திலே திருமணித்தியாலப்பத்தி அநுஷ்டிக்க வாஞ்சித்து, தமதுஉடன் துறவிஒருவர் தமக்காகவாயில்காப்பாளராய்நிற்குமாறு அவரை மெலிந்துகோரிக்கொண்டார். பிறதர்மிதமிஞ்சி நெடுநேரம் போக்காதிருக்க உடன்படின் தாமும் அவரதுகோரிக்கைக்கு உடன்படுவதாக அத்துறவிவாக்கிட, பிறதர் ஆனந்தபூரிதராக ஆலயத்துட் பிரவேசித்து நெடுமுழந்தாளிட்டுத் திருமணித்தியாலப் பத்திமுயற்சியை ஆரம்பித்து நடத்தியபோது எவ்வளவு நேரஞ்சென்றதென அவர் எள்ளளவேனும் எண்ணினாரில்லை. அவருக்காக வாயில் காத்துநின்றதுறவி, பிறதர் வருவார்வருவாரென்று வழிபார்த்து விழிபூத்தவராய் அவரண்டைசென்று: "செபத்திலேஒருமணித்தியாலத்துக்குப் பதில்இருமணித்தியாலம் போக்கிவிட்டீரே, இனிவாரும்" என்று ஏவ, அவர்: "தயைகூர்ந்துஐந்துநிமிஷம் மாத்திரம் பொறுத்து நின்றுகொள்ளும்" என்று கெஞ்சிவேண்டினார். அவர் சம்மதித்துப்போய்க் காத்திருந்தும், அந்திரேபிறதர் வந்தபாடில்லை என்று கண்டு, மீண்டும் அவரை அணுகி: "ஐந்துநிமிஷமல்ல மூவைந்துநிமிஷத்திலுங் கூடியநேரம் போய்விட்டதே. இனியேனும்வாரும். நான் படிப்பிக்கப் போகவேண்டுமே" என்று நெருக்க, தமது காலதாமசத்துக்காக அவரது மன்னிப்பையிரந்து, வாயார அவருக்கு நன்றித்துதிகூறி, தமது உள்ளத்தைச் சற்பிரசாதநாதர் சந்நிதியில்விட்டுவிட்டு, தமதுஉடலைமாத்திரங் கொண்டு புறப்படுகிறவர்போலே ஆலயத்தைவிட்டுவெளிப்படலாயினார்.

நமது காலத்திலே சீவித்து, நமது காலத்திலே பரமபதம் அடைந்த பரிசுத்தபிதா பத்தாம்பத்திநாதர் சமஸ்த தைவிகஞானிகளுக்கும் சுத்தவாளர்களுக்கும் தேவகன்னிகா மாதாவைக் குறித்துச் சர்வஅங்கீகாரமாயுள்ள கொள்கையொன்றைத் தாமும்புத்திசித்தபூர்வமாகஒப்பி: "பூலோகத்துக்குச் சகலவரப்பிரசாதங்களும்பாய்ந்துவரும் பரலோக கால்வாயாகத் திகழ்பவர்மரியநாயகிதாமே" என்று கட்டுரைத்திருக்கின்றார். சர்வவரப்பிரசாத மத்தியஸ்தியாகிய மாதாவின் திருநாளை 1921-ம் ஆண்டு அங்கீகாரஞ்செய்தருளிய 15-ம் ஆசீர்வாதேந்திரர் என்ற பாப்பாசரும், ஏதொரு அருட்பிரசாதமும், ஏதொரு நன்மையும் தேவதிருவுளப்பிரகாரம் மரியாயின் மத்தியஸ்த மூலமாகவே அநுக்கிரகிக்கப்படுவதாகவும், தேவன் மகிமைப்படுத்தத் திருவுளங்கூரும் அர்ச்சியசிஷ்டர்களால் நிகழ்த்தப்படுவனவாகக் காணப்படும் அற்புதங்கள் முதலாய், திருச்சபைப்பிதாக்கள் "மத்தியஸ்தர்களின் மத்தியஸ்தி" எனப் பாராட்டும் மரியாயின் உடன்முயற்சியின்றி நிகழ்த்தப்படுவதில்லையென்றும் நிர்ணயித்துக் கூறியுள்ளார்.

ஆகவே, நம்துறவி அந்திரேபிறதர் கொண்டுள்ள அர்ச்சியசிஷ்டதனத்துக்கும், அற்புதவரத்துக்கும் அடுத்த அரும்பெரும் அருளை எல்லாம் அர்ச். சூசைமாமுனிவர் சனுவால் மாத்திரமல்ல, மரியநாயகியின் மனுவாலுமே அவர் அடைந்துகொண்டாரென நாம் முடிவுசெய்துகொள்ளல் நியாயவிரோதமாகுமா?

தமது ஆயுஷியகாலத்திலே மகத்தான அருட்களைத்தேவதாயார்வழியாக அடைந்துள்ளதுறவி அவரைவிசேஷவிதமாகப் பத்திசெய்து வராதிருப்பதெங்ஙனம்? தேவசங்கற்பத்தால், தமக்கு மகாவிரத்தபத்தராகவும், தேற்றரவாளராகவும், பாதுகாவலராகவும் நியமனம்பெற்ற சூசையப்பரைத் தேவதாயார் நேசிக்கும்வண்ணம் மனுமக்களுள்ளே வேறுயாரை நேசிக்கின்றார்? சூசைமுனிவரது மகிமையை அந்தத்திவ்விய தாயாரைப்போலே ஆசிப்பவரை அம்முனிவரின் பக்தராயுள்ள சுத்தவாளர் சுத்தவாளிகளுட்தானும் கண்டுகொள்ளல் சாத்தியப்படுமா? தமது மகாபரிசுத்த பத்தாவைத் தமது பிரியதாசர் நேசித்துவரும்படி அவர்கள் அவரது நாமத்தைத் தரித்துக்கொள்ளும்படி ஏவியதேவதாயார்—அவருடையதாசரின் அந்தியவேளையில் அவருடன் தாமுமே தரிசனைகொடுத்து அவர்களைத் தேற்றியருளிய தேவதாயார்— அவர்மீது கொள்ளத்தகும் பத்தியை விர்த்தியாக்கி, அவரது தொண்டரின் தொகையைப்பெருக்கி, அவரது மகிமையைப் பிரபலியப்படுத்திய அர்ச். தெரேசம்மாளுக்குக் காட்சிகொடுத்து அவளை அன்புருக்கமாக அரவணைத்து, அழகுமயமான வெள்ளியமோட்ச அங்கியையும், தங்கமயமான கழுத்துப்பட்டிகையையும், ஓர் திருச்சிலுவையையும் அவளுக்கு அணிந்து தமக்குள்ள இருதயநன்றியையும், ஆனந்தத்தையுங் காண்பித்தருளிய தேவதாயார் (Ribera The Life of St. Teresa, Chap. XV.) அமெரிக்காக்கண்டம் எங்குமுள்ளவிசுவாசிகள் தமது திருப்பத்தாவை மேன்மேலும் அறிந்து நேசித்துச் சங்கித்துமன்றாடும்படி செய்தற்காகத் தாம் ஊட்டிவந்த நன்மதிகளாலும், தாம் கட்டிஎழுப்பிய இராசாலயத்தாலும், அவர் நாமத்தாற் தாம் நெடுநாள் நிகழ்த்திய அற்புதங்களாலும், தமது சீவியகாலமெல்லாம் பிரயாசித்துழைத்துவந்த துறவி அந்திரேபிறதரை எவ்வளவு கனிகரமும், நன்றியும், சந்துஷ்டியுங்கொண்டு நேசித்து வந்திருப்பார்! நமது பரித்தியாகியும் தமதுமோட்ச தாயார்மாட்டு எத்துணைய பிள்ளைக்குரியபத்தியும், நம்பிக்கையுங்கொண்டவராய் அவருக்குத் தொண்டாற்றி வாராதிருந்திருப்பார்!

(தொடரும்)

### பாப்பரசரும் அங்கிளிக்கன்சபை மேற்றிராணியாரும்

இங்கிலாந்திலே சவுத்வாக்நகர் அங்கிளிக்கன்சபை மேற்றிராணியாராக நியமனஞ் செய்யப்பெற்றுள்ளவரான கனம்.கனன் மேர்வின் ஸ்ரொக்வூட் அவர்கள் சமீபத்திலே இத்தாலியில் தமது விடுமுறையைக் கழித்துவந்தபோது வத்திக்கான்மாளிகை சென்று பாப்பரசரின் பிரத்தியேக பேட்டிஒன்றைப் பெற்றுக் கொள்ளலாயினர். "பாப்பரசர் பெருமகிழ்ச்சி உண்டுபண்ணும் ஓர் மனுஷர்; அவருடனே நான் சம்பாஷித்தபோது எனதுவீட்டிலேயே இருந்து சம்பாஷித்தது போல இன்பம் உண்டுபண்ணுவதாய் இருந்தது" என்று அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியதும் தெரிவிக்கலாயினர்.

---

### லுத்தேர் சபையாரின் திருப்பம்

தென்மார்க்நாட்டின் தலைப்பட்டணமாகிய கொபெனுகன் நகரிலுள்ள லுத்தேர்சபையாரது தேவமாதாவின் கோவிலிலே அந்நாட்டின் லுத்தேர்சபைத் தலைவரான கனம். புக்சாவ் - டாம்காட் மேற்றிராணியாரின் அனுமதியைப்பெற்றுத் திருவழிபாட்டில் "கிறியே", "குளோறியா" எனும் இரு செபங்களும் திரும்பவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. லுத்தேர்சபை ஆரம்பமானபோது எந்தஒரு செபமும் விலக்கப்படவில்லை. ஆனல், முன்சொன்ன இரண்டும் காலகதியில் கைவிடப்படலாயின. இவ்விதம் அவர்கள் இருசெபங்களையும் மீளச் சேர்த்திருப்பதானது, தென்மார்க்கின் லுத்தேர்சபையிலே அதிகம் கத்தோலிக்க முறையான ஆராதனை வழிபாட்டுக்குப் பொதுவிலே திரும்புவதற்கான இயக்கங்களில் ஒன்றாகும்.

---

### குஷ்டரோகர்களின் கிராமம்

கோறியாவிலே குஷ்டரோகர்களுக்கான ஓர்கிராமத்தை அமைப்பதற்கென்று ஜேர்மனியிலுள்ள கத்தோலிக்க பிள்ளைகள் தங்கள் செலவைக் குறைத்துச் சேமிக்கும்பணத்தை உபகரித்துவருகின்றார்கள். பாப்பரசரின் திருப்பாலத்துவ ஸ்தாபனம் சென்றவருடம் விடுத்தமனுவின்பேரிலே அவர்கள் சல்லிசல்லியாக உதவியபணம் சிறுதுளி பெருவெள்ளமானற்போன்று கோறியாவில் வேக்வான் நகருக்குச் சமீபமாய் இத்தப்புதியகிராமத்தை அமைக்கும் வேலையை ஆரம்பிக்கக் கூடியதாக்கிவிட்டது. இந்தக் கிராமம் குஷ்டரோகர்கள் வசிப்பதற்கான பத்துக் கட்டடங்களையும், ஓர்ஆஸ்பத்திரியையும் அடக்கியுள்ளது. ஆஸ்பத்திரிச் சத்திரவைத்தியசாலைக்குத் தேவைப்படும் உபகரணங்கள் ஏற்கனவே அங்குபோய்ச் சேர்ந்துவிட்டன. மேலும் அப்பிள்ளைகள் உதவியபணம் குஷ்டரோகர்கள் தங்கள் சீவனோபாயத்துக்குத் தேவையானவைகளை உழைத்துத் தேடிக்கொள்ளுமாறு காணிகள், ஆயுதங்கள் வாங்கவும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

---

### பாப்பரசரும் முதல்நன்மையும்

பரிசுத்தபாப்பரசர் அன்று சனிக்கிழமை தொழிலாளர் வகுப்புக் குடும்பங்களைச்சேர்ந்த பாலியர்களும், வாலிபர்களுமான 40 பேருக்கு முதல்நன்மை வழங்கலாயினர். அதனை வழங்குவதற்காக அவர் ரோமைநகரினூடாக மோட்டர்காரிலே சென்றபோது, வழிநீளம் தங்கள் தொழில்துறைகளுக்குப் போய்க்கொண்டிருந்த மக்கள் ஆர்ப்பரித்து வாழ்த்திநிற்க, வியா வாஸ் செல்லாரி எனுமிடத்திலுள்ள கன்னிகாமடஞ்சென்றார். கடந்த 9; வருடங்களிலே இந்தக் கன்னிகாமடம் பாப்பரசர் ஒருவரை வரவேற்றது இதுவே முதன்முறையாகும். இந்தமடம் ரோமைநகரிலுள்ள அதிகம் பழமையான ஞானவொடுக்க விடுதிகளில் ஒன்றாகும். இங்கே பிள்ளைகள் முதல்நன்மைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டு ஓர் ஆயத்த ஞானவொடுக்கமுஞ் செய்கின்றார்கள். திவ்வியபூசையிலே மணிகிலுக்கப்பட்டபோது முதல்நன்மை பெறவிருந்தவர்களெல்லாம் பாதிவட்டமாகப் போய்நிற்க, பரிசுத்தபிதா அவர்களுக்கு முதல்நன்மை வழங்கினர். பூசையின்பின் அவர்களையெல்லாம் தம்மைச் சூழவர நிற்கும்படி செய்து, தாம்பெற்ற முதல்நன்மையைப்பற்றிப் பேசலானர்.

---

### வேதகலாபனை காலத்திலே

வேதகலாபனை நடைபெற்றுவரும் சீனவின் அநேகபகுதிகளிலே கத்தோலிக்க கோவில்கள் வெறுமையாய் இருப்பதே சீனக்கத்தோலிக்கமக்கள் திருச்சபைக்குப் பிரமாணிக்கமாய் இருகிறார்களென்பதற்கு ஓர்நல்ல அறிகுறியாகும். அங்கே குருமார் சிறைச்சாலைகளிலும், தொழில்முகாங்களிலும், வீட்டுக்காவலிலும் இருந்துவருகின்றனர். அதனல் விசாரணைப் பங்குகளிலே கத்தோலிக்கமக்கள் ஞானவிதமாகப் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தும், ஞானவிதமாகத் திவ்விய நன்மைபெற்றும், குடும்பசெபங்களுக்காக ஒருங்கு சேர்ந்தும், ஒருங்குசேர்ந்து செபமாலை சொல்லியும் தங்களால் கூடிய வகையிலே வேதவிசுவாசத்தை உயிருள்ளதாகப் பாதுகாத்துவைக்க முயன்றுவருகிறார்கள்.

---

### ஜசிந்தாவின் கல்லறைப் பீடம்

பாத்திமாவிலே தேவதாயாரின் திருசேத்திர மகாதேவாலயத்திலே பக்கப்பலிபீடம் ஒன்று நவமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பலிபீடம் போர்த்துக்காலிலே லிஸ்பன், ஒபோட்டோ, கொயிம்பறா முதலாம் நகர்களில் வசிக்கின்ற ஆங்கில பாஷைபேசும் மக்களால் வழங்கப்பெற்று, அத்திருசேத்திரத்திற்குச் சமீபத்திலே அவர்கள் நடத்திய வருடாந்ததிருயாத்திரையின்போது அபிஷேகஞ் செய்யப்படலாயிற்று. அம்மகா தேவாலயத்தில் இடதுபுறமாக முதலாவதாயுள்ள இந்த மங்களவார்த்தைப் பலிபீடத்தில்தான் ஜசிந்தாவின் கல்லறை இருந்துவருகிறது. பாத்திமாவிலே தேவதாயார் காட்சியளித்த மூன்று பிள்ளைகளில் இவளும் ஒருத்தியாவள். காட்சிகள் அருளப்பெற்றுச் சிறிதுகாலத்தின்பின் இவள் இறந்துபோயினள்.

---

### ஆஸ்திரியாவும் கம்யூனிஸ்தரும்

ஆஸ்திரியாவிலே அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் எஞ்சியிருந்த மூன்று கம்யூனிஸ்த பிரதிநிதிகளும் தோற்கடிக்கப்பட்டார்கள். 1956-ம் ஆண்டின் ஐப்பசிமாதத்திலே அயலிலுள்ள ஹங்கேரிய சுதந்திரஎழுச்சிக்கலகம் ருஷியர்களால் மிருகத்தனமாக அடக்கிவைக்கப்பட்டதிலிருந்து ஆஸ்திரியர்கள் நல்லபாடம் படித்தார்கள். அதனல் இம்முறைப் பொதுத்தேர்தலிலே அங்கு கம்யூனிஸ்த அபேட்சகர்கள் சகலரும் ஒருங்கே தோல்வியுற்றார்கள். சுதந்திர சமூகம் ஒன்றாலே கம்யூனிஸத்தை எதிர்த்து வெற்றிகரமாகத் தோற்கடித்துவிட முடியுமென்பதை ஆஸ்திரியாவின் எல்லைப்புறமாகவுள்ள சோவியற் தோழநாடுகள் இன்று கண்டுகொள்ளலாயின. அந்த ஐப்பசி மாதத்துச் சுதந்திரஎழுச்சிக் கலகத்திலே கொல்லப்பட்ட ஹங்கேரியர்கள் சுதந்திர ஐரோப்பிய நாடுகளிலே கம்யூனிஸ்த கட்சிக்குப் பெரும் இழுக்கை உண்டுபண்ணி அவற்றின் பலத்தையும் குறைத்துவிடலானர்கள்.

---

### பாப்பரசருக்கு எம். பி. யின் பாராட்டுரை

பிரித்தானிய பாராளுமன்றத்திலே காடிவ் வடக்குத் தொகுதியின் பிரதிநிதியும், 'கன்சர்வேற்றிவ்' எனப்படும் பரம்பரைக் கட்சியைச் சேர்ந்த ஓர் புரொட்டஸ்தாந்தருமான திரு. டேவிட் லெவெலின் அவர்கள் "சண்டே எம்பையர் நியூஸ்" என்ற பத்திரிகையில் தமது வாராந்தபத்தியில் பரிசுத்த பிதாவைப்பற்றி எழுதியிருப்பது வருமாறு: "உலகத்தில் அறிமுகமில்லாத ஓர் பெரியாரை நான் தெரிவுசெய்ய வேண்டுமானல் பாப்பரசரையே தெரிவுசெய்வேன். அவர் ருஷிய பாஷை பேசுகின்ற ஓர் இத்தாலிய கிராமவாசி. பூமியிலே மகா வல்லபமுள்ள மனிதரிடையே ஒருவராயும், பாப்பரசின் சிம்மாசனம் ஒன்றில் எக்காலத்திலாவது அமர்ந்த அதிகந் தாழ்மையுள்ள ஓர் கிறீஸ்தவராயும் விளங்குகின்றார். நான் ஓர் புரொட்டஸ்தாந்தர் என்றமட்டிலே என்னைப்பொறுத்தவரையில் நமது இராசகுடும்பத்துக்கும், வத்திக்கானுக்குமிடையிலுள்ள ஆசாரமரியாதைகள் மகாராணியாரின் தாயாரும், மார்கிறெற் இளவரசியும் வத்திக்கானுக்கு விஜயஞ்செய்து பாப்பரசரைச் சந்தித்ததன்மூலம் நிலைநாட்டப் பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்."

—*—

## ஆர்ஸ்பட்டினமும் அர்ச். வியான்னி அருளப்பரும்

அகிலமுழுவதிலுமுள்ள பங்குக் குருமாரின் பாதுகாவலரும், பிரான்ஸ்தேசத்திலே ஆர்ஸ் எனப்படும் சிறிய பட்டினத்தில் ஓர் பங்குக்குருவராகத் தமது வாழ்க்கையிலே சுமார் 40வருடங்களைச் செலவிட்டுள்ளவருமான அர்ச். மரியே வியான்னி அருளப்பர் இற்றைக்கு 100வருடங்களின் முன் மரித்ததுமுதல் ஆர்ஸ்பட்டினம் அதிகம்சொற்ப மாற்றமே அடைந்திருக்கிறது. வீடுகளில் அதிகமானவை அதேவிதமாகவே இருந்துவருகின்றன. சிறிய பங்குவிசாரணைக் கோவிலும் அவர் விட்டுப்போனதுபோல ஏறக்குறைய அதேவிதமாகவே இருக்கின்றது. அதன்பக்கமாய் அவர்வசித்திருந்த சிறியகுருமனை இருந்துவருகிறது. அவரது இரும்புச் சமையற்பானைகள் சமையல்அறையில் இன்னுமே தொங்கிக்கொண்டிருக்கின்றன. அவரின் படுக்கைஅறையில் ஒரு சிறிய பாத்திரமும், கரண்டியும் மேசைதுடைக்குந் துண்டு ஒன்றும், கம்பிவிளிம்பைக்கொண்ட மூக்குக்கண்ணாடியும், திருச்சபை மந்திரமாலைகளும் சிறிய ஒரு மேசைமீதுகிடக்கும் விதத்தைக் கவனித்தால் இப்போதுதான் அவர் வெளியேபோயிருக்கிறார் என்று நினைக்கக்கூடியதாயிருக்கும். இங்குதான் 1840-ம் ஆண்டு —அதாவது இற்றைக்குப்119வருடங்களின்முன் மேதினமன்று தேவதாயார் அவருக்குக் காட்சியளிக்கலானர். அவர் வசித்திருந்த குருமனையிலுள்ள எரிந்து கருகிய அவருடையமெத்தையையும், கருகிப்போன கட்டிலையும் கண்டதே யாத்திரீகர்கள் திடுக்காட்டமுற்றவர்களாய்ப் பேசிக்கொள்ளவியலாது மவுனமாய்நிற்பார்கள். இது பிசாசின்வேலையாகும். அது இந்தப் பரிசுத்த பங்குக் குருவானவரை இடைவிடாது தொல்லைப்படுத்தியும், இரவிலே கதவில் அடித்துமோதியும், பொதுவிலே அவர்நித்திரை செய்யவிடாது குழப்பியும் வரலாயிற்று. ஆர்ஸ்பட்டின மக்கள் இன்றும் வயல்களில் வேலைசெய்கிறார்கள். கவர்ச்சிகரமான ஞாபக சின்னங்களைக் கொண்ட சிலசாய்ப்புகளையும், சிலபண்டகசாலைகளையும் நடத்துகிறார்கள். ஆர்ஸ்பட்டினத்தின் மாபெரும் பொக்கிஷமாய் இன்று விளங்குவது அர்ச். கூரேதார்ஸின் அழியாத் திருமேனியைக்கொண்ட அவரது கல்லறையேயாகும்.

## ஆனி மாதம்

பரிசுத்தபாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துக்கள்

**வேதபோதக கருத்து:** கிறீஸ்துநாதரை அகற்றிய சமுதாயத்தில் உழைக்கும் குருமாருக்காக வேண்டிக்கொள்வது.

**பொதுக்கருத்து:** இரட்சணிய அலுவலில் ஈடுபடும் சாதாரண கத்தோலிக்கர் தங்களுடைய ஞானப்பணிக்குத் தேவையான ஆத்மீக, போதனை, விஞ்ஞான, யந்திரீகஅறிவில் உறுதியாக ஆயத்தப் படுத்தப்படுமாறு மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

ஆனிமாதம் 11-ந் திகதி

## திருஇருதய நேசம்

17-ம்நூற்றாண்டிலே நமது அன்புள்ள இரட்சகர் பிரான்ஸ் தேசத்தில் பக்தியுள்ளஒருகன்னியாஸ்திரிக்குத் தரிசனமானார். அவளுக்குத் தமது இருதயத்தைத் திறந்துகாட்டினார். மனிதர் அதைநேசித்து மகிமைப்படுத்தும்படியாக அவள்உழைக்கவேண்டுமென்று தாம்ஆசிப்பதாக அவர்கூறினார். மனிதர் மேல் தமக்குள்ள அளவுகடந்த நேசம் அந்த இருதயத்தில் துலங்கும்படி செய்தார். அதைச் சுற்றிலும் ஒருசிறிய முண்முடி சூழ்ந்திருந்தது. மேலே ஒருசிலுவை காணப்பட்டது. தமதுஇருதயத்திலே உண்மையானபக்தி கொண்டுள்ளவர்கள் மீது தாம் எண்ணிறந்த நன்மைவரங்களைப் பொழிவதாகச் சொல்லி அவற்றைப் பன்னிருவாக்குறுதிகளினால் நிர்ணயித்தார்.

ஆனால், அவர் தமதுநேசத்தை வெளிப்படுத்த ஏன் இருதயத்தைக்காட்டவேண்டும் என்று கேட்கலாம். அவருடைய மனுஷசுபாவம் தேவசுபாவத்துடன் ஒன்றித்திருந்தமையாலும், தேவஆளாகிய அவர் மனுஷசுபாவம் எடுத்தபடியாலும் அவரது முழுச்சரீரமும் நமதுஆராதனை, வணக்கத்திற்குப் பாத்திரமானதுதான். யேசுவின் திருமுகம் கடவுளுடையமுகம். அவருடையகரங்களும், கால்களும் தேவனுடைய கரங்களும், கால்களுமாகும். ஐக்கியப்பட்ட இருசுபாவங்களும் பிரிக்கக்கூடாதவைகளாய் இருக்கின்றன. ஆகவே, கல்லறையில் அடக்கஞ்செய்யப்பட்டிருந்த நமதுஆண்டவரின் திருச்சரீரம் நமதுஆராதனைக்கு உரிமைபெற்றதுதான். அவ்வாறே அவருடையஇருதயம் தெய்வத்துடன் ஒன்றித்திருந்தமையால் நமதுஆராதனைக்கு முற்றும்சுதந்திரம் கொண்டிருக்கிறது. ஆனால், திருஇருதயத்திற்கு நாம்செய்யும் ஆராதனை நமஸ்காரத்திற்கு வேறுவிசேஷ காரணமுமுண்டு.

நாம் சாதாரணமாக இருதயத்தையே அன்பின் இருப்பிடமாகவும், சிநேகத்தின் அடையாளமாகவும் குறிப்பிடுகிறோம். 'என்ன கல்நெஞ்சனாய் இருக்கிறான்', 'அவனுக்கு இரக்கமுள்ளமனம்'என்று சொல்லுகிறோம். நல்லஇரக்ககுணமுடையவன் புத்தியினாலல்ல, ஆனால், மனதினால்—பட்சமுள்ள சுபாவத்தினால்-காரியங்களைச்செய்கிறான். சிநேகத்தின் இருப்பிடமாக மனிதர்இருதயத்தைக் கருதுவதினால் நமது அன்புள்ள இரட்சகரும் தமது இருதயத்தைக்காண்பித்து, நம்மேல் தமக்குள்ள நேசத்தை விளக்கிக்காட்டினார். "இதோ மனுமக்களை அளவற்ற விதமாய் நேசிக்கும் இருதயத்தைப்பார்! அதற்குப்பதிலாக மனிதர் அதை எவ்வளவோ அற்பமாக நேசிக்கிறார்கள்" என்றார். அவர் தங்களை எவ்வளவாக நேசிக்கிறார்என்று மனிதர் ஒருசிறிது அறிவார்களானால் தங்களது பிரதியன்பை அவர் முறையிடாத விதமாகக் காட்டிக்கொள்வார்கள்.

அவர் மனுமக்களைக் கவனிக்கிறார். தமது நேசத்திற்கு எப்படிப் பதில்நேசம் காண்பிக்கிறார்களெனப்பார்க்கிறார். ஆனால், மனிதரில் அநேகர் அதனைப் புறக்கணிக்கிறார்கள்; பலர் அதில் யாதொரு சிரமத்தையும் காண்பிக்கிறதில்லை. அதை வெறுக்கிறவர்களும் சொற்பமல்ல. ஆகையால், நேசபைத்தியம்கொண்ட அவர் மனுமக்களைக் கடைசிமுறையாகத் தட்டியெழுப்பச் சித்தங்கொண்டார். தமது இருதயத்தைக் காட்டியாவது அவர்களின்மனதை இழகச்செய்து, அதில் கொஞ்சமாவது சிநேகம் சுரக்கச்செய்யலாமென்று தீர்மானித்தார். மனிதரை எவ்வளவு அளவுகடந்த அன்புடன் நேசிக்கிறார் என்பதைப் பட்டவர்த்தனமாய்க் காட்டினார். மனிதர் தமக்குப் பிரதியன்பு காட்டாததைப் பற்றியும் வெகுவருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டார். மனிதரின் இந்தநன்றியற்ற அசமந்தம் அவர்மனதை எவ்வளவாகப் புண்படுத்துகிறது என்பதை நாம் அறியவேண்டுமென்று அவர் ஆவல்கொள்ளுகிறார். நாம் தம்மைநேசிக்க வேண்டுமென்று தாகம்கொள்ளுகிறார்.

நன்றிகெட்டதனத்தைப் பார்க்கிலும் அதிகஈனமான செயல் ஒன்றில்லை என்லாம். உப்பிட்டவரை உள்ளளவும் நினையென்று சொல்லியிருக்கிறது. "தினைத்துணை நன்றிசெய்யினும் பனைத்துணையாய்க்கொள்வர் பயன்தெரிவர்" என்றும் கூறப்பட்டிருக்கிறது. நம்மிடமிருந்து அநேகஉபகாரங்களைப் பெற்றஒருவன் அதற்கு ஒருசிறிதும் நன்றிகாட்டாது நம்மையே கேவலமாக நினைத்தால் நமதுமனம் புண்ணாகாதிருக்குமா? சொல்லற்கரிய பெரும்நன்மையுபகாரங்களை நல்லயேசு நமக்கு வெகுதாராளமாய் அள்ளிக்கொடுத்திருக்க, நாம் அவரை நேசியாதிருப்பது அவருக்கு மாபெருந்துயரத்தை வருவிக்குந்தானே. நாம் நன்றிகெட்டவர்களாயிருந்தும் யேசுவின்திருஇருதயம் நம்மைக் குற்றஞ்சாட்டப் பின்வாங்குகிறது. "அறியாமையினால் இவர்கள் நன்றிசெலுத்தவில்லை" யென்று அவர் சாக்குச்சொல்லிவிடுகிறார்.

நாம் யேசுவின் நேசத்தைச் சற்றே உருசிபார்ப்போமானால் அவர்அன்பில் லயித்துவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. நம்மேல் அவர்கொண்டுள்ள நேசத்தை அறிவதினால் நாம் அவருக்குப் பதில்நேசம் காட்டுவோம். நமதுநேசம் வெகுசொற்பமாயிருந்த போதிலும் அவருக்குப் பெரும் ஆறுதலை அது வருவிக்கும். எப்பொழுதும், விசேஷமாய் அவரது திருஇருதயப்பக்திக்கென நேர்ந்துகொள்ளப்பட்ட இந்த ஆனிமாதத்திலும் நாம் அவரது நேசத்தில் வளர்ச்சியடையவும், மற்றவர்களும் அவரை நேசிக்கும்படிசெய்யவும் முயன்றுவருவோம்.

---

## சுதேச வர்த்தமானம்

### அர்ச். அந்தோனியார் திருநாள்

பாசையூர்

நிகழும்ஆனிமாதம் 1-ந்திகதியன்று ஆரம்பமான பாசையூர், அர்ச். அந்தோனியார்திருநாள் நாளைநின்று வரும் 13-ந்திகதிசனிக்கிழமை பிற்பகல் 4மணிக்குத் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் பூர்த்தியாகும். திருநாளின் ஆரம்பபக்திமுயற்சிகள் தினமும்7மணிக்கு ஆரம்பமாகி வண. எஸ். பிரான்சிஸ்சுவாமியவர்களின் பிரசங்கத்துடன் நடைபெற்றுவருகின்றன. 13-ந்திகதியாகிய திருநாளன்றுகாலை 5மணிக்கும், 6மணிக்கும், 7மணிக்கும் திவ்வியபூசைகள் நிறைவேறும். முதல்நாளாகிய 12-ந்திகதிவெள்ளிக்கிழமை தேவநற்கருணைத்திருநாள் கொண்டாடப்பட்டு அன்றுபிற்பகல் 4-30மணிக்குத் திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரம் நடைபெற்று அர்ச். அந்தோனியார்திருநாள் வேஸ்பர்பாடப்படும்.

### சளிச்சுரம்பற்றிய எச்சரிக்கை

'புளூ'என்று அறியப்படுகின்ற 'இன்புளூவன்சா' சளிச்சுரம்பற்றியே இப்போது எங்கும் பேச்சாயிருக்கிறது. அதற்குக்காரணம்! அது இலங்கை முழுவதிலும் தீவிரமாகத் தற்போது பரந்துகொண்டுவருவதேயாகும். இது தொற்றுநோய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்னும் வரவில்லையாம். இதுபரவுவதைத் தடைசெய்யுமுகமாக, இந்தச்சுரத்தால் பீடிக்கப்பட்டவர்கள் படுக்கையிலேயே இருக்கவேண்டுமென்றும், சனக்கூட்டங்களையும், சினிமாத்தியேட்டர்களையும் தவிர்க்க வேண்டுமென்றும் பொதுமக்களுக்கு ஆலோசனைகூறப்பட்டிருக்கிறது. கடுமையான காய்ச்சலுடன் கூடிய உடல்நோவே இந்தச்சளிச்சுரத்துக்கு அறிகுறியாகும் இரண்டொருதினங்களில் காய்ச்சல் அமராவிட்டால் டக்டர்மாரின் ஆலோசனையைக் கேட்பது அவசியமென்று புத்திமதி கூறப்படுகிறது.

### அரசாங்ககட்சியில் சேர்ந்தார்

அரசாங்க பாராளுமன்ற கட்சியிலிருந்து இராசினாமாச்செய்த நாத்தாண்டி எம். பி. திரு. ஹியு பெர்னாண்டோ பிரதமருக்குச் சமர்ப்பித்துள்ள கடிதம்ஒன்றிலே தன்னைமீண்டும் அக்கட்சியில் சேர்த்துக்கொள்ளுமாறு அவரைக்கேட்டிருக்கின்றார். இவர் அக்கட்சியிலிருந்து அப்போது இராசினாமாச்செய்தபோதிலும் உணவு—விவசாய மந்திரிபதவியை இராசினாமாச்செய்யவில்லை, தான் மாக்ஸியத்தை ஆதரிப்பவனல்லஎன்றும், அரசாங்கத்தின் முற்போக்கான நடவடிக்கைகளை எப்போதுமேஆதரிப்பவனென்றும் இவர்தெரிவித்திருக்கின்றார் இவர் அரசாங்க பாராளுமன்றகட்சியில் மீண்டும்சேர்ந்து கொள்ளுமிடத்து அக்கட்சி 50பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சி 48பிரதிநிதிகளையும் கொண்டிருக்கும். திரு. பிலிப் குணவர்த்தன, திரு. வில்லியம் டி சில்வா முதலாம் ஐவரும் இராசினாமாச்செய்தபின் அரசாங்க பாராளுமன்றகட்சியிலிருந்து விலகிய அறுவருள்ஒருவர்.

---

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

மடு விடுதலை

கத்தோலிக்க பாடசாலைகளின் 1959-ம் ஆண்டுக்குரிய விசேஷ விடுதலை நாட்களுடன் கீழேதரும் திகதிகளையும் சேர்த்துக்கொள்ளவும்.

ஆனி 29 தொடக்கம்

ஆடி 3 முடிய மடு விடுதலை.

PHILIP PONNIAH,

Gen. Manager of R. C. Schools.

Jaffna, 29-5-59.

---

**விற்பனைக்கு**

முத்திப்பேறுபெற்ற

மாட்டின் தே போரஸ்

சரித்திரச் சுருக்கமும்

நவநாள் மன்றாட்டும் அடங்கியது.

முத்தர் மாட்டினில்

பத்திகொள்ளும் உத்தமர்க்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

— விலை பிரதி சதம் 10 —

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.

தேவையானோர்:

அதிபர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு எழுதவும்.

---

### குருப்பட்டாபிஷேகம்

மாதகல்வாசரான திரு. நீ. ச. யோசேப்புதம்பதிகளின் ஏகபுதல்வரும், கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள பரிசுத்த இலங்கைமாதா குருமடத்தில் வேதசாஸ்திரம் கற்றுவருகிறவரும், அமலோற்பவ மரியகாயகசபையைச் சேர்ந்தவருமான வண. எஸ். பிரான்சிஸ் பிறதர் அவர்கள் அக்குருமடஆலயத்திலே நாளைநின்றுவரும் 13-ந்திகதி சனிக்கிழமை7-30மணிக்கு, குருப்பட்டமென்னும் திருப்பட்டாபிஷேகஞ் செய்யப்பெறவிருக்கின்றார். குருப்பட்டாபிஷேக திருச்சடங்கின் போது சமூகமாயிருந்து புதியகுருவருக்காக மன்றாடிக்கொள்ளுமாறு சுற்றத்தவரும், அன்பர்களும் அவர்பெற்றோராலே பரிவாகக் கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

### முதல் ஒருகொத்து அரிசிவிலை

அரிசிக்கூப்பன் புத்தகமுள்ளவர்கள் நிகழும்ஆனிமாதம்15-ந்திகதி திங்கட்கிழமைமுதல் கூப்பன்கொடுத்துவாங்கும் முதல்ஒருகொத்துஅரிசியை 25சதமாகவும், இரண்டாவதுகொத்துஅரிசியை 45சதமாகவும் வாங்கிக்கொள்ளலாம். அரிசிவிற்பனவு சம்பந்தமாய் இப்புதிய முறையை நடைமுறைக்குக் கொண்டுவர இருகாரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, தற்போது கொத்துஒன்றுக்கு 35சதமாயுள்ள கட்டுப்பாட்டுவிலைக்கு அரிசிவாங்க முடியாதிருக்கும்ஏழைகள் ஒருகொத்து அரிசியாவதுவாங்க வசதியளிப்பது. ஒருபடிஅரிசிதானும் வாங்கவகையற்றிருக்கும் ஏழைகள்மூலமாகப் பெருந்தொகைஅரிசி கள்ளச்சந்தைக்குச் செல்லாமல்தடுப்பது மற்றொன்று.

*  *  *

### சங்கடநிலையில் இருக்கிறார்

"திரு. பிலிப் குணவர்த்தன அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவரமுடியும் என்பது எனக்குப் புரியவில்லை. அப்படிக் கொணர்ந்தாலும் அதனை விவாதத்துக்குஎடுக்க ஆறுமாதங்களாவது எடுக்கும். தனது பிரேரணையில் அவர் என்ன நியாயங்கள் கூறப்போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன். மிகச்சங்கடமானநிலையில் அவர் இருக்கின்றார்."

டக்றர் என். எம். பெரேரா,

எதிர்க்கட்சித் தலைவர்.

# அங்கும் இங்கும்

### நிராகரிக்கப்பட்ட யோசனை

"சமஷ்டி அல்லாத அரசாங்கம் எதிலும் தமிழரசுக்கட்சி சேராது. அரசாங்கத்தில் பதவியேற்க இதுதான் நல்ல சமயமென்று வவுனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம் கூறிய யோசனையை நாங்கள் நிராகரித்துவிட்டோம். பிரச்சினைகள் தீராவிடில் தமிழரசுக்கட்சி நேரடி நடவடிக்கைகள் எடுக்கும்."

திரு. அ. அமிர்தலிங்கம்,
வட்டுக்கோட்டை எம். பி.

### தமிழினமும் தமிழ்மொழியும்

"தமிழனென்ற இனம் உலகிலுள்ளவரை தமிழ்மொழி உயிருடன் இருக்கத்தான் செய்யும். ஏனெனில், தமிழன் தனதுமொழியைத் தன்விழியாகக் கொண்டுள்ளான். இலங்கையிலே இம்மொழியை இல்லாமல் செய்துவிடலாமென யாராவது எண்ணினால் அது பகற்கனவேயாகும்."

திரு. அ. அமிர்தலிங்கம்,
வட்டுக்கோட்டை எம். பி.

### அரசியல் சந்தர்ப்பவாதி

"திரு. பிலிப் குணவர்த்தன லங்கா சமசமாஜகட்சியில்சேருவதிலேஎனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், அவர் ஓர் அரசியல் சந்தர்ப்பவாதி. அவரிடம் அரசியற்கொள்கைகள் இல்லை. ஆகவே, எமது கொள்கைகளைப் பின்பற்ற அவர் தயாராயிருக்கிறாரா என்பது எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது."

டக்றர் என். எம். பெரேரு,
எதிர்க்கட்சித்தலைவர்.

### தனிச்சிங்களமும் தமிழ்ப்பிரதேசமும்

"தனிச்சிங்களசட்டம் தமிழ்ப் பிரதேசங்களில் ஒருபோதும் நடைமுறைக்குவர முடியாது. இந்தவெற்றியை நாம் சாதித்தே தீருவோம். நமக்கு வேண்டியது சமஷ்டியா அல்லது தனித்தமிழ் நாடா என்பதைத் தீர்மானிப்பது மிகச்சுலபம். ஆனால், நமது உரிமைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதுதான் மிகமுக்கியமான விஷயம்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய், எம். பி.

### சிங்கள ஸ்ரீ பிரச்சினை

"சிங்களஸ்ரீ பிரச்சினையைத் தீர்க்க நாம் மூன்றுமார்க்கங்களைப் பிரதமரிடம் தெரிவித்தோம். தற்போதைய அரசியல் நெருக்கடி தீர்ந்ததும் நிலைமையை ஆராய்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதாகப் பிரதமர் பண்டாரநாயகா உறுதியளித்தார். வீண்காலதாமதஞ் செய்து இப்பிரச்சினையைத் தட்டிக்கழிக்க அவர் முயல்வாரேயானால் நிச்சயம் ஏமாற்றமடைவார்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய் எம். பி.

### ஜனுப் முஸ்தபாவும் கம்யூனிஸமும்

"இலங்கைமக்கள் கம்யூனிஸத்தை ஆதரிப்பதா அன்றேல் தடுத்துநிறுத்துவதாவென்ற முக்கியமானபிரச்சினைக்குப் பதில் அளிக்க வேண்டிய ஓர் முக்கியமான கட்டத்திலே இன்று நிற்கிறார்கள். அடுத்தபொதுத்தேர்தல்கூட இந்தப்பிரச்சினையின்மீது நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தவேளை இடதுசாரிக்கட்சிகளை ஆதரிப்பவர்கள் கடைசியிலே கம்யூனிஸத்தை ஆதரிக்கும் நிலைமைக்கு வந்துவிடுவார்கள். ஐக்கியதேசியக் கட்சிக்குத்தானும் கம்யூனிஸத்தை ஒழிக்கும் நோக்கமிருந்தால் தற்போதைய அரசாங்கத்தை ஆதரிப்பதுதான் ஒரேயொரு வழியாகும். இந்த எண்ணமேதான் என்னை அரசாங்ககட்சியில் சேரத் தூண்டியது."

ஜனுப் எம். எம். முஸ்தபா,
பொத்துவில் எம். பி.

### நமக்கு வாழ்வு அளிக்கும்

"இறைவன் எங்கும் உள்ளான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. இளைஞர்கள் இந்தஉண்மையை உணர்தல்வேண்டும். டாம்பீகவாழ்வு சிறந்ததென்று சிலர் எண்ணுகின்றனர். உழுவது வெட்கம்என்பது இவர்களின் மனப்பான்மை. மேல் நாடுகளிலே இளைஞர்கள் இத்தகையமனப்பான்மையின்றி வாழ்வதால்தான் அந்நாடுகள் செழித்தோங்குகின்றன. நாம் ஒன்றுபட்டுக் காடாயிருக்கும் நிலத்தை நாடாக்கினால் அது நமக்கு வாழ்வளிக்கும்."

திரு. க. தெட்சணாமூர்த்தி,
அரசாங்க உதவி அதிபர்.

### ஒரு தேர்தல் குண்டு

"பொதுத்தேர்தல்நெருங்கிக்கொண்டிருப்பதால் பிரதமர் முதலகொத்து அரிசியின் விலையை 25 சதமாகக் குறைத்துள்ளார். ஒருதேர்தல் குண்டாகையால் இது எனக்கு ஆச்சரியமூட்டவில்லை. மாசியின்விலையும், பருப்பின் விலையும் குறைக்கப்பட்டிருந்தபோதிலும் இவைகள் பகிரங்கமாக்கெற்றில் கிடைக்கவில்லை. சாதாரணமக்கள் இவைகளைப் பகிரங்க மாக்கெற்றிலோ, அல்லது கூட்டுறவுச்சங்கக் கடைகளிலோ பெறமுடியாது. இந்தச் சாலவித்தையைச் செய்து பிரதமர் எல்லா மக்களையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது."

திரு. ஆர். பிரேமதாசா,
முன்னாள் கொழும்பு உதவிமேயர்

### திணிக்க முயல்வது அநீதியாகும்

"இந்நாட்டைத் தாய்நாடாகக் கொண்டுள்ள சிறுபான்மை மக்களின் சகல உரிமைகளையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே, மக்களின் அரசாங்கம் என்று சொல்லும் எம். ஈ. பி. தமிழ்மக்களின் தொண்டையில் சிங்களமொழியைப் பலாத்காரமாகத் திணிக்க முயல்வது அநீதியாகும். எம். ஈ. பி. இன் பலத்த தூண்கள் விழுந்துவிட்டன. இன்னும் சில தள்ளாடிக்கொண்டிருக்கின்றன. சிங்களத்தை 24 மணித்தியாலங்களில் அரசாங்கமொழியாக்க வேண்டுமென்ற அதன் திட்டம் இந்தநாட்டை இரண்டாகப்பிரித்து, வகுப்புவாதத்தை ஏற்படுத்திவிடுமென்று முன்னர் நாம் எச்சரித்தோம். ஆனால், மொழிப்பிரச்சினையைத்தீர்க்க இது ஒரு தகுந்த பரிகாரமென்று அது கருதியது. ஆயின் இதனால் ஏற்பட்டவிளைகளை இங்கு நான் எடுத்துக்கூறத் தேவையில்லை."

டக்றர் கொல்வின் ஆர். டி சில்வா,
வெள்ளவத்தை – கல்கிசை எம். பி.

---

## மரணசெய்தி—சில்லாலை

சில்லாலைவாசரும், திரு. எம். செபஸ்தியாம்பிள்ளையின் ஏகபுத்திரனும், சில்லாலை பலநோக்குக்கூட்டுறவு ஸ்தாபனத்தின் முகாமைக்காரரும், சில்லாலை கத்தோலிக்கவாலிபர்சங்கக் காரியதரிசியுமான திரு. ஏ. வேதநாயகத்தின் தந்தையாருமான திரு. எஸ். அந்தோனிமுத்து அவர்கள் கடந்தமதி 15-ந்திகதி சனிவாரம் அந்தியதேவத்திரவிய அனுமானங்களை நல்லறிவுடன் பெற்று இறைவனடி சேர்ந்தனர். மரிக்கும்பொழுது இவருக்குவயசு ஐம்பது. இவருக்கு ஒரு புதல்வனும், ஒரு புதல்வியும் உளர்.

இவர் பிரேதமானது மறுநாள்மாலை பலஇடங்களிலும் இருந்துவந்த திரளான இனசனர், சிநேகிதர்சமூகத்தில் இவரின் நெருங்கிய உறவினருருக்களில் ஒருவரான வண. எஸ். சிங்கராயர்சுவாமியார், சட்டநாதர்குரவர் வல். டெசி, வண. நீக்கிலாப்பிள்ளை சுவாமிகள் துணைபுரிய அந்தியதிருச்சடங்குகள் நிறைவேற்றிநிற்க, இரு வெண்பரிகள்பூட்டிய இரதத்தில் சேமக்காலை கொண்டுசென்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரை இழந்து துன்புறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களோடு நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

---

## குருப்பட்டாபிஷேக அழைப்பிதழ்

நிகழும் 1959-ம் ஆண்டு ஆனிமாதம் 13-ந் திகதி
சனிக்கிழமை காலை 7-30 மணியளவில்
கண்டி, அம்பிற்றியா
பரிசுத்த இலங்கைநாயகி குருமட ஆலயத்தில்
குருப்பட்டம் பெறவிருக்கும்
எங்கள் மைந்தர்
**வண. ஜே. பிரான்சிஸ் O. M. I. அவர்களின்**
குருப்பட்டாபிஷேக திருவைபவத்தில் சமுகந்தந்து
புதிய குரவருக்காக இறைவனை வேண்டிக்கொள்ளும்படி
எமது சுற்றத்தவர்களையும், அன்பர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

நீ. ச. யோசேப்புவும்,
பாரியாரும்.

மாதகல், 1-6-59.

---

# "1960—தண்டனையின் வருடம்"

## —சிஸ்றர் லூஸி கூறுகின்றார்

1960-ம் ஆண்டு அணுகிவருகிறதோடு அந்தக்கியாதிபெற்ற பாத்திமா "இரகசிய"த்தைப்பற்றி மக்கள் கேட்டபடியே இருக்கின்றார்கள். அங்ஙனமாக, தற்போது சிஸ்றர் லூஸியிடமிருந்து—அதாவது 1917-ம் ஆண்டு பாத்திமாவிலே தேவதாயார் காட்சியளித்த சிஸ்றர் லூஸியிடமிருந்து ஓர் எச்சரிக்கை கிடைத்திருக்கிறது. உலகம் செபமும், தபமும்செய்ய வேண்டும்; அன்றேல் 1960-ம் ஆண்டிலே ருஷியாவைக்கொண்டு "மிகப் பயங்கர"த்துக்குரிய விதத்திலே தேவன் அதைத்தண்டனையால் திருத்துவார்என்பதே அந்தஎச்சரிக்கையாகும்.

சிஸ்றர் லூஸியுடன் காட்சிகளைக்கண்ட பிரான்சிஸ்கோவும், ஜாசிந்தா மாற்தோவு மாகிய அவளுடைய மைத்துனனுக்கும், மைத்துனிக்கும் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான விசாரணையின் விண்ணப்பகாரரான வண. அகஸ்ரீன் புவென்ரெஸ் சுவாமியாருக்கு 1957-ம் ஆண்டு சிஸ்றர் லூஸி அளித்த பேட்டியொன்றிலே அருளப்பட்ட இந்தஎச்சரிக்கை மெக்சிக்கோவிலே தற்போது பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது.

சுவாமியாரிடம் சிஸ்றர் லூஸி சொன்னதாவது: "சுவாமி, என்னைநம்புங்கள்; தேவன் உலகத்தைத் தண்டனையால் திருத்தப்போகின்றார்; அதுவும் மிகபபயங்கரத்துக்குரிய விதத்திலே. சுவாமி, இந்தப் பரலோகதண்டனை அண்மியிருக்கிறது. 1960-ம் ஆண்டு தூரத்தில் இல்லை. அதற்குமுன் செபமும், தபமும் செய்யாவிடின் அப்போது நிகழப்போவது எல்லோருக்குமே அதிகம்சோககரமான ஓர் காரியமாகும்."

சிஸ்றர் லூஸி மேலும்தொடர்ந்து கூறியதாவது: "சுவாமி, அவர்களுக்குச் சொல்லுங்கள். அந்தத் துர்ப்பாக்கியமான ருஷியதேசத்தை அதற்குமுன் நாம் மனந்திருப்பவில்லையானால் அநேகநாடுகள் பூமுகத்திலிருந்து இல்லாமல் மறைந்துபோகும்; உலகமுழுவதுக்கும் இந்தப்பரலோக தண்டனையின் கருவியாக ருஷியா இருக்குமென்று எனது மைத்துனனும், மைத்துனியுமான பிரான்சிஸ்கோவுக்கும், ஜாசிந்தாவுக்கும், எனக்கும் திருக்கன்னிகை அநேகம்தடவை கூறினர்."

—※—

## நவசந்நியாச அபேட்சகர்
## புதிய நிவாசம்

### மாத்தளை

மரியாயின் பிரான்சிஸ்கன் சபையில் அபேட்சகராய்ச் சேர்ந்து வசித்துவந்தவர்களின் நிவாசம் இதுவரை ஒரு ஓலைக் குடிசையாகவே இருந்துவந்தது. காலகதியிலே இது பழுதடைந்து பாவனைக்கு உதவாமற் போயினமையால் அதற்குப்பதில் ஒரு புதிய நிரந்தரமான நிவாசம் ஒன்றைக் கட்டவேண்டிய அவசியமேற்பட்டது. ஆகவே, எங்கள் ஞானத்தந்தையர் சங். அகஸ்ரீன் போல், O. F. M. அவர்கள் இரவு பகலாய் அயராது முயற்சியெடுத்து நாலாபக்கமும் சென்று பல கனதனவான்களின் விசேஷ சகாயம் பெற்று 20 பேர்மட்டிலே தாராளமாய்த் தங்கி வசிக்கத் தகுதிவாய்ந்த ஒரு சிறந்த நிவாசம் ஒன்றை வெகு விரைவில் கட்டிமுடிக்கலானார். இதனை அமலோற்பவமாதாவின் பாதுகாவலில் ஒப்படைக்கும் நோக்கமாய் அத்தாயாரின் 100-ம் வருட யூபிலி மகோற்சவ ஞாபகமாக இம்மாதம் 31-5-59 ஞாயிறுவாரம் பிற்பகல் 4-30 மணியளவில் மகாவந்தனைக்குரிய டி. றெஞ்ஞோ O. S. B. ஆண்டவர் அவர்களால் குருமார், விறதர்மார், கன்னியர், பலசனர் கூடிய சமுகத்தில் ஆசீர்வதிக்கப்பெற்றுத் தேவநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது. ஈற்றில் சமுகமளித்தோர் சகலருக்கும், உபகாரிகளுக்கும் ஆண்டவரவர்கள் நன்றித்துதி கூறிப் பொதுச்செப வேண்டுதல் செய்தார். முடிவில் கூடிய சகலருக்கும் சிற்றுண்டி உபசாரனை அளிக்கப்பட்டு விழா இனிது சமாப்தியாயிற்று.

—நிருபர்

# மட்டக்களப்பு
## தாண்டவன்வெளித் தபால்

**தேவநற்கருணைத் திருநாள் :**

சென்ற (28-5-59) வியாழனன்று நமது பங்கில் இத்திருநாள் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை நமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளால் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பெற்றுத் திருப்பலிபூசை நிறைவேற்றித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பெருந்திரளானோர் திருவிருந்தருந்தித் திருநாளைச் சிறப்பித்தனர். அன்றுகாலை 8-30 மணியளவில் நமது கிளென்னி ஆண, பெண பாடசாலைக் கத்தோலிக்கபிள்ளைகள் ஆலயத்தில் ஒன்றுகூடினர். (இதில் சற்பிரசாத யுத்தவீரர் சபையினரும் கலந்திருந்தனர்) கட்டளைக்குரவரா திவ்விய நற்கருணையின்வரலாறு, அதனை ஆராதிக்க வேண்டிய முறை, அதனால் அடையும் வரப்பிரசாதங்கள்பற்றிச் சிறுவர்க்கேற்ற சிறந்ததோர்பிரசங்கம் செய்யப்பெற்றது. அதன்பின் யாவரும் ஒன்றுகூடி நற்கருணைக்குரிய வணக்க வழிபாடுகளைச் செய்துமீண்டனர்.

**யாத்திரைக்கன்னி யாது கேட்கின்றார் ?**

நமதுபங்கில் கடந்தஒரு மாதகாலமாக இல்லத்தரிசனைசெய்துவரும் பாத்திமாநாயகி நம்மிடம் யாதுகேட்டு வருகின்றார்? பாத்திமாவில் மூன்று சிறுவர்களிடம்கேட்டதையே—"**செபம்**" "**தபம்**" என்பவற்றையே நம்மிடமும் கேட்கின்றார். ஆம்! அரசியல்நெருக்கடி, கம்மியூனிஸ்தர் நெருக்கடி, பசி, பிணி முதலியன உலகம் எங்கணுமே சூழ்ந்துள்ள இந்நாட்களில், நமது வீடுகளைத்தேடிவந்து ஒருநாள் பூராவும் நம்முடன் தங்கிச்செல்லும் நமதுபாலோகதாயிடம் நாம் கேட்கவேண்டியவைகள்தான் எவை? அறுப்புவேலை மிகுதி. ஆனால், ஆட்களோ குறைவு. அதிலும் நமதுபங்கில் தேவஅழைத்தல் மிக மிகக்குறைவு. இந்தக்குறையை நிவிர்த்தியாக்க வேண்டும்தாயே என்று கேட்கவேண்டுமெனவும், இந்தயாத்திரையின் முக்கியநோக்கம் இதுவே எனவும் நமது கட்டளைக்குரவர் அவ்வப்போது விளக்கிவருகின்றார். எனவே, பெற்றோர்களே! விசேஷமாகத் தாய்மார்களே! வருங்காலப் பிரசைகளின் வாழ்வு இப்போது உங்கள் கரங்களிலுண்டு. இதோ! உங்கள் இல்லங்களில் இருக்கும் அன்னைக்கு—பரலோகதாயாருக்கு நீங்கள் கொடுத்[illegible]ப்பவேண்டியது பொன்னும், மணி[illegible]ல. பெயரும், புகழுமல்ல. தேவ[illegible]ழைத்தலுக்குரியவர்களை வழிநடத்தி[illegible]ப்படுவதுதான். நமதுபங்கில் நம் மேற்றிராசனத்தில், நம்இலங்கையில், உலகில் தேவஅழைத்தல் அபரிமிதமாகக்கிடைக்க இடையறாது வேண்டிக்கொள்வோமாக.

பாத்திமா அன்னையே தேவஅழைத்தல் அபரிமிதமாக அருள்புரிவீராக!

**வணக்கமாத முடிவுவிழா :**

மாதாவின்வணக்கமாத முப்பத்தொருதினங்களும் மிகுந்தபத்திசிறப்புகளுடன் கழிந்தன. முடிவுதினமன்று காலை ஆலயமணிகளின் ஆர்ப்பரிப்பும், ஒலிபெருக்கியின்ஓசையும், மக்களை ஆலயத்தில் வந்துகூடச் செய்தன. அவர்களும்வந்து மலர்ப்பூங்காவினுள் சென்றோர்போன்று உணர்ச்சிவசப்பட்டு நின்றனர். இயற்கையும், செயற்கையும் இணைந்தவாறாய் ஆங்குதொங்கிய மலர்க்கூடைகள் இளந்தென்றலுடன் இன்னுரையாடியதாலா? நீலவர்ண மலர்களினிடையே அல்லிகள் மின்தீபங்களாக நல்லொளிபரப்பிய பீடத்தில் மகிமைப்பிரதாபத்துடன் மாசில்லாத்தாய் அமரவைக்கப்பெற்ற காட்சியின் மாட்சியாலா? கதறுவதன் மேரிம். அத்தகைய அலங்காரங்களிடையே நமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் பாடற்பூசை நிறைவேற்றினர்.

அன்றுபிற்பகல் மணி 3. திடீரென இடிமுழக்கத்துடன் பெருமழை பொழிய ஆரம்பித்தது. எல்லோரும் ஏக்கத்துடன் மாதாவின்அருளை எதிர்நோக்கினர். மாலை மணி 5. மழைக்கோலம் மெல்லமெல்லக் கலைந்து, அனல்கக்கிய வெய்யிலின் அகோரம் தணியப் பூமியில்நீர்தெளித்துப் பாதைகள் செப்பனிடப்பட்டமைபோன்று இயற்கையே சாதகமாகி இனியசூழ்நிலையை அளித்துக்கொண்டிருந்தது.

மாமரிதாசர் மகிழ்வுடன் ஆலயமுன்றிலையும், மாதாபவனிவரும் வீதிகளையும், இல்லமுன்றில்களையும் அலங்கரிப்பதில் ஈடுபட்டனர். பல்வேறாக மின்தீபங்கள் தேவாலயமுகப்பையும், மதிலோரங்களையும் அழகுக்கழகு செய்வதுபோன்று அழகுசொலிக்கச்செய்தன. பவனிக்குஆயத்தமாக ஆலயமணிகளின்நாதமும், ஒலிபெருக்கியின் செபஓசையும், நிரையமைப்பும் ஆகியன ஆரம்பமாயின. அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த கேடயத்தில் மாசில்லாஅன்னை பவனிவரஆயத்தமானர். நீலவர்ணஉடைகளில் நான்கு இளம்பெண்மணிகளும், வாலிபர்களும் முறையே மாறிமாறி மாதாவைத் தாங்கிச்சென்றனர்.

திருச்சிலுவை, கிளென்னி ஆண், பெண்கழகத்தினர் கொடிகள், சின்னங்களுடன பத்திச்சபையினர், பெண்கள், ஆண்கள், பூசைப்பரிசாரகர், கட்டளைக்குரவர்செல்ல, சுற்றுப்பிரகாரத்தின் போது வீதிகளின் நான்குசந்திகளிலும் தேவதாயின் அருளை இரக்கும் நான்குசெபங்களை யாவரும் முழந்தாட்படியிட்டுச் சொல்லி அதனை ஓர் அருட்சிக்குரியதாக்கினர்.

தேசோமயமாகக் காட்சிதந்த தேவாலயத்தில் தேவதாய்வந்துசேர்ந்ததும் புளியந்தீவுப் பங்குக்குரவர் வண. ஹென்றி பொன்னையா சுவாமிகளால் தேவஅழைத்தலைப்பற்றி அரியதோர்பிரசங்கம் சொல்லப்பெற்றது. யாத்திரைக்கன்னிகை கேட்பதும் இதுவே; தாராளமாகக் கடவுளுக்குக் கொடுங்கள்; "அறுப்புவேலைக்கு ஆட்களை" என்பதைக் கதைகள்மூலம் தமது பிரசங்கத்தில் அவர்உறுத்தியமை குறிப்பிடத்தக்கது. பின்னர் நமது பங்குக்குரவர் நடுவிடம்வகிக்க, வண. எவ். எம். செலர், வண. ஜே. டிக்சோனிங், சுவாமிகள் துணைபுரிய மாலைஆராதனைபாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. பின்னர்யாவரும் மாதாவின்பீடத்தைஅண்டிக் காணிக்கைசெலுத்தி வரமிரந்துநின்றனர்.

இவ்விழாவைஇம்முறை அத்தனை பக்திபரிமளிப்புகளுடனும், அலங்கார வைபவங்களுடனும் கொண்டாடவழி வகுத்த பங்குக்குரவருக்கும், நோவனைகாரர்க்கும், உரியதுணைகளை உவந்து செய்த அன்பர்களுக்கும், பங்குக்கிறிஸ்தவர்க்கும் நன்றிதெரிவிக்கின்றோம்.

— நிருபர்

---

● வத்திக்கானின் சுவிஸ்காவலர் தொகையை 133பேரிலிருந்து 100 பேராகப் பரிசுத்தபிதா குறைத்துவிட்டிருக்கின்றார். இந்தக்காவலர் பட்டாளத்துக்கென்று செய்யப்பட்டுள்ள 167 புதியஒழுங்குச்சட்டங்களையும் அவர் அங்கீகரித்திருக்கின்றார். இவைகள் வருகிறஆவணிமாதம் 7-ந்திகதியன்று நடைமுறைக்குவரும்.

● அகிலமுழுவதிலுமுள்ள பங்குக்குருமாரின் பாதுகாவலரான அர்ச். வியான்னிஅருளப்பரை மகிமைப்படுத்துமாறு ஆர்ஸ்பட்டினத்துக்கு இங்கிலாந்திலுள்ளகுருமாரின் முதலாவது திருயாத்திரை இந்தஆனிமாதம்3-ந்திகதி ஆரம்பமாயிற்று. நோர்தாம்ரன் நகரின் பாக்கர் மேற்றிராணியார் இந்தயாத்திரைக்குத் தலைமைவகித்திருக்கின்றார்.

# பழையமாணவர் தினம்
## கொழும்புத்துறை

கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர்தாபனப் பழையமாணவர்தினம் சென்ற 23-5-58 சனிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியகலாசாலை மாணவர்களாலே கொழும்புத்துறைத் தாபன சரித்திரத்திலே முன்னொருபோதும் நடைபெற்றிராதமுறையில் தயாரிக்கப்பட்டிருந்த சூழல் உபகரணக்காட்சியைப் பழைய மாணவர்தினத்திற்கு முன்தினமாகிய வைகாசி 22-ம் நாள் வெள்ளிக்கிழமை சங்கதலைவர் வண. சுவாமி பி. நீயோகுப்பிள்ளை அவர்கள் திறந்துவைத்ததோடு பழையமாணவர்தினக் கொண்டாட்டம் ஆரம்பமானது.

23-ம் நாள் சனிக்கிழமை காலை 6-30 மணிக்குப் பெருந்தொகையான பழையமாண்வர்கள் கூடியசமூகத்தில் தாபனஅதிபர் வண. சுவாமி. பி. நீயோகுப்பிள்ளை அவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. அவ்வேளை பெருந்தொகையான பழையமாணவர்கள் தெய்வீகவிருந்தில் பங்குபற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது. காலைப் போசனம் முடிந்ததும் பழைய-புதிய மாணவர்களுக்கிடையில் காபந்தாட்டப் போட்டியும், பழைய--புதிய மாணவிகளுக்கிடையே வலைப்பந்தாட்டப் போட்டியும் உற்சாகமாக நடைபெற்றன.

10-30 மணியானதும் பொஞ்ஜீன் மண்டபம்கொள்ளாது ஆசிரியர், ஆசிரியைகள் ஒன்றுகூடிவிட்டனர். மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் தலைமையிலே பழைய மாணவர்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் ஆரம்பமானது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"; கிறீஸ்துவ உலகம் ஒன்றுபடவேண்டும்; ஒற்றுமை என்னும்சக்தி பெற்றுவிட்டால் பூமியில் எதனையும் அதனால் சாதித்துவிட முடியும்; நன்மை செய்யப் பிறந்த எமக்கு ஒற்றுமை அகத்தியம வேண்டும்; இவ்வொற்றுமையைப் பிறர்சிநேகச்செயல் ஒன்றாலேயே பெறமுடியும்; இச்செயல் ஒன்றே மக்களை ஒன்றுபடச் செய்யத்தக்கது" என்னும்பொருள்பட ஆண்டகை அவர்கள் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினர். காரியதரிசியவர்களால் சென்றகூட்ட வரலாறு வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1958-ம் ஆண்டு பயிற்றப்பட்டு வெளியேறிய ஆசிரியர், ஆசிரியைகளின் ஞானோபதேச தத்துவப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

அதன்மேல்உத்தியோகஸ்தர்தெரிவு நடைபெற்றது. வண. சுவாமி பி. நீயோகுப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், சங் தாயார் பீற்றர், பத்திராதிபர் ஏ ஞானப்பிரகாசம்என்பவர்கள் உபதலைவர்களாகவும், திரு. எம். மரியாம்பிள்ளை, மிக்கேற்பிள்ளை மரியமார்சலா என்பவர்கள் இணைக் காரியதரிசிகளாகவும், திரு. எம். வி. ஆசிர்வாதம் அவர்கள் தனாதிகாரியாகவும், திரு. என். சபாநாயகம், திரு. எம். எஸ். எசக்கியேல், திரு. பி. அருளானந்தம், திரு. எம். மரியசூசை, திரு. ஏ. செபஸ்தியாம்பிள்ளை, செல்வி ஜி. பிரான்சிஸ்கா, செல்வி எஸ். மரியம்மா, செல்வி டி. திரேசா, செல்வி எஸ். மேரிபுஷ்பம் என்போர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும் தெரியப்பெற்றார்கள்.

பின்னர்நடைபெற்ற விருந்து, அர்ச். சூசையப்பரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், தேவநற்கருணை ஆசிர்வாதம் ஆகிய வைபவங்களுடன் பழையமாணவர்தினக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

— காரியதரிசி

—*—

# விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா
## சென் ஜேம்ஸ் பாடசாலை, குருநகர்

விஞ்ஞானம்என்ற சொல்லிலே உலகம் சுழன்றுகொண்டிருக்கும் இந்நேரத்தில் தானும் அதைத் தொடர்ந்து முன்னேறுவதே நாகரீகயுகத்தில் வாழும் மனிதரின் இயல்பாகும். அன்று வெள்ளிக்கிழமை எங்கள் பாடசாலைச் சரித்திரத்திலே பொன்எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய ஓர் நன்னாளாகும். அன்றுதான் எங்கள் சென் ஜேம்ஸ் சாதனு ஆண்பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தைச் சம்பத்திரிசியார் கல்லூரிஅதிபர் வண. எஸ். என். அருள்நேசன் சுவாமியவர்கள் விளக்கேற்றித் திறந்துவைத்தார். அவரை மேலவகுப்பு மாணவர்கள் பூமாலைஅணிவித்துக் கௌரவித்தனர். அவர் உரையாற்றியபோது, மின்சாரம் என்பதை மனிதன் முன்னர் கண்டதில்லை; விஞ்ஞானத்தினலேயே உலகம் இயங்குகிறது; எனவே, விஞ்ஞானம் முன்னேறவேண்டுமென்று குறிப்பிட்டார். தொடர்ந்து எமது தலைமை ஆசிரியர் தற்காலக் கல்வி வெறும்புத்தகப்படிப்பில் தங்கியுள்ளது; வாழ்க்கைக்கும், சீவனோபாயத்துக்கும் ஆனவற்றைத் தயாரிப்பதே கல்வியின்நோக்கமாய் இருக்கவேண்டும்; இந்தநோக்கம் சித்தியடைவதற்காகவே தொழிற்கல்வியில் முன்னேற்றம் காணவேண்டி இன்று இப்பாடசாலையில் புதியதோர் விஞ்ஞானகூடத்தை, அநேக உபகாரிகளின் உதவியுடன் அமைத்துள்ளோம்; இந்த விஞ்ஞானகூடம் இவ்வூர் மாணவர்கட்கு ஓர் சிறந்த திருப்பத்தை உண்டாக்கி வாழ்க்கைக்கேற்ற கல்வியை அளிக்கும் என்பதே எனது நம்பிக்கை எனக் கூறினர்.

அன்றுதான் எமது ஞானஆயர் மேற்றிராணித்துவ அபிஷேகஞ்செய்யப்பெற்ற 10-ம் ஆண்டு நிறைவு சுபதினம். அதனால், ஆண்டகை அவர்களைப் பாடசாலை மாணவர்கள் அன்று காலை 10 மணிக்குச் சென்று சந்தித்துச் சோபனம் கூறினோம். அவருடைய பத்தாவது ஆண்டுச் சேவைகள்பற்றி உயர்வகுப்புமாணவன் செல்வன் ம. தோமாஸ் என்பவர் பேசினார். பின்னர் அவரின் திருக்கர ஆசிபெற்றுத் திரும்பினோம்.

அற்றைஞான்றே எமது கட்டளைக்குரவர் வண. ஈ. பொமிக்கோ சுவாமியவர்களின் பெயர்கொண்ட பெருநாளுமாகும். எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணரும், தூண்டுகோலுமாகவுள்ள சுவாமிகளுக்கு நாம் என்னகைம்மாறு செய்யக்கூடும்? எமது ஞானத்தந்தையின் தியாக சேவையையும், எதற்கும் முன்னின்று தலைகொடுக்கும் பெருங்குணத்தையும், பொதுநலத்தையே குறிக்கோளாகக்கொண்டு கடமையாற்றி வருகின்ற அவரது அளப்பருஞ்சேவையையும் பாராட்டி உயர்தரவகுப்பு மாணவர்களாகிய செல்வன் கி. சூசைநாதர், வ. பிரகாசராசா, ச. மரிசிலீன் என்போரும் மற்றும் செல்வன் ப. கிங்சிலி, ப. டியூக் என்பவர்களும் சொல்மாரி பொழிந்தார்கள். குரவர் சில பொன்மொழிகள் உரைத்துத் தமது திருக்கர ஆசியை ஈந்தார்.

விஞ்ஞான ஆயகூடத் திறப்புவிழாவிற்குக் குருநகர்மக்கள் கடல்மடை திறந்தாற்போல் சமூகந்தந்தமைக்கு எமது நன்றி உரித்தாகுக.

— ஓர் மாணவன்



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

எமது பரிசுத்தபிதா அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டிய இரண்டாவது சுத்தவாளர் 33வயதில் விதவையான அர்ச். யுவக்கினுள். கணவன் இறந்தபொழுது இவளுக்குப்பிள்ளைகள் 6பேர். இனசனர்வழக்குகளால்பல இன்னல்இழைத்தனர்; குடும்பப் பணத்தைக் கரைத்தனர். சோதனைகளிலும், துன்பங்களிலும் யுவக்கினு டெ வெட்றுனு தமஸ் பரிசுத்த திரித்துவத்திலும், கிறிஸ்துநாதரிலும், உடன்மனிதரிலும் அன்பு கொண்டுவந்தாள்.

இவள் அடியிட்ட பிறர்சிநேகத்தின் கார்மேல் கன்னியர்சபையினர் ஸ்பெயினிலிருந்து, மொறொக்கோ, ஆர்ஜென்ரினு, சிசிலி, முதலிய தென் அமெரிக்கநாடுகளில் பரவியிருக்கின்றனர். ஸ்பெயினில் இருபது வருடங்களின் முன்கடந்த உள்நாட்டுக்கலகத்தில் இச்சபைத்தலைவரும் 30கன்னியாஸ்திரிமாரும் உயிரிழந்தனர். இப்பொழுது சபையினர்தொகை 2581.

இப்புதிய சுத்தவாளர் 1783-ஆண்டு சித்திரை16-ந்திகதி பார்சலோனுவில் உதித்தார். 12வயதில் கார்மேல்சபையிற்சேர விரும்பினர்; ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1798-இல் பார்சலோனுவில் இளம்வழக்கறிஞர் தெயோடோரூ தமஸ்என்பாரை அறியவந்து 16வயதிற்குமுன் அவரை விவாகஞ்செய்தாள்.

முதற்குழந்தை 1800-ம்ஆண்டு பிறந்தது. எல்லாமாக எட்டுக்குழந்தைகள். நெப்போலியனின் படையெடுப்பு (1808) யுவக்கினுலுக்குப் பல கஷ்டங்களை விளைவித்தது; மலையில்ஒளிந்திருக்கும்போது அவள் இருகுழந்தைகளை இழந்தாள்.

தெயோடோரூ வழக்கறிஞர் வேலையைவிட்டுப் பார்சலோனுவிற்கு வந்தபொழுது அவர்களுடைய கடைசிப்பெண்குழந்தை கார்மென் பிறந்தாள். 1816-இல் கணவன் இறந்துபோக யுவக்கினு அவர்களுடைய வெட்றுனுமாளிகையில்வசித்து, ஆறுபிள்ளைகளை வளர்ப்பதிலும், அவ்விடத்திலிருந்த வைத்தியசாலையில் நோயாளருக்குச் சேவைசெய்வதிலும் ஈடுபட்டுவந்தாள்.

1820-இல் கப்புச்சின்சபைக்குரு எஸ்ரேபன் பபிரகஸ் அவர்கள் அவள் கார்மேல்சபையிற்சேரக் கொண்டிருக்கும் எண்ணத்தைத் தடுத்துக் கல்விகற்பிக்கவும், நோயாளரைப் பராமரிக்கவும் ஒருசபையை ஏற்படுத்தும்படி ஏவினர்.

அவளுடைய இரண்டாவதுமகள் இனெஸ் கன்னியாஸ்திரியாக விரும்பியபொழுது, அதைத்தடைத்து விவாகஞ்செய்வதே கடவுள்சித்தமெனக் கூறினள். இனெசையும் குழந்தையாயிறந்த கார்லொற்ருவையும்தவிர மற்றப்பிள்ளைகள் யாவரும் கன்னியாஸ்திரியானுர்கள்.

பிரான்சிஸ்கன் மூன்ருஞ்சபையிற் சேர்ந்திருந்த யுவக்கினுவுக்கு 1820, 1821-ம்ஆண்டுகளில் ஏற்பட்டபோர் கடுஞ்சோதனையாயிருந்தது.

விச் மேற்றிராணியாரான பவுலோ கோர்க்குவெரா, சபையை நிரைப்படுத்தும்படி யுவக்கினுவைப்பணித்தார். எஸ்ரேபன் சுவாமியார் சட்டங்களையும், சபைஒழுங்குகளையும் ஏற்படுத்தித்தந்தார். அவளுடைய வீட்டிலேயே சபைஆரம்பமானது.

கார்லிஸ்ட்போரில் யுவக்கினு ஐந்துநாட்சிறைவாசமனுபவித்தது மாத்திரமல்ல, இன்னும்சில கன்னியாஸ்திரிமாருடன் பிறனீஸ்மலையைக் கடந்து ஓடவேண்டியுமிருந்தது.

1843-இல் திரும்பி, 1844-இல் அர்ச். அந்தோனி மரிய கிளறட் போதித்த ஞானெடுக்கத்தின்பின் எல்லோரும் சந்நியாச வாக்குத்தத்தஞ் செய்தனர்.

1851-இல் பாரிசநோய்வாய்ப்பட, தலைமைப்பதவியைத் துறந்து சாதாரணகன்னியாஸ்திரியாக வாழ்ந்துவந்தாள். பின்னர் பார்சலோனுவில் மகள் தலைவியாயிருந்த வைத்தியசாலையொன்றிற்குக் கொண்டுபோகப்பெற்று அங்குநடந்த கொள்ளைநோய்க்கு இரையாகி 71-ம்வயதில் 1854-இல் பரமபதமடைந்தாள்.

அண்ணா.

—( )—

## என்னைக் கெடுத்தவனுக்கு ஐயோ கேடு!

காம்பிரே நகரத்தில் ஓர் மேன்குலத்து வாலிபன் ஒருவன் சிறிதுகாலத்துக்குமுன் சீவித்துவந்தான். அவன் பாடசாலையில் கல்விகற்கும்போது நல்லவாலிபரிடத்தில் இருக்கத்தக்க சகல நற்குணங்கள் யாவும் அவனிடத்திலும் இருந்தன. அவனின் நடத்தை அப்போது இருந்ததுபோல் எப்போதும் நிலைத்திருக்குமாகில் அவனுடைய குடும்பத்திற்கு அவன் ஓர் அலங்காரமாய் விளங்கியிருப்பான் என்பதில் அற்பமேனும் சந்தேகமில்லை. ஆனுல், அவன் கொஞ்சங் கொஞ்சமாகத் துர்ச்சகவாசத்தாற்கெட்டு, மிதமிஞ்சிய காமாதுரத்தில் ஆழ்ந்து, சர்வநல்லுணர்வுகளையும் இழந்து வெறிகொண்டவன்போல் துன்மார்க்கனுய் நடந்துவந்தான். இந்தநிலைமையில் அவனுடைய நல்லசிநேகிதர்கள் எவ்வித புத்திசொன்னுலும் அவன் அதனைக்கேளாது கெட்டவனுகவே நடந்தான். அதையறிந்த அவ்வூர்ப்பங்குக் குருவானவரும் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிசொல்லியும் அவனே அதற்கும் செவிசாய்க்கவில்லை. இப்படியிருக்கையில் அவன் ஓர்நாளிரவு நடுச்சாமத்தில்திடீரென நடுக்கத்துடன் பதறிக்கூக்குரலிட்டு அழத்தொடங்கினுன். அப்போது அவனுடைய குடும்பத்தார் அனைவரும் அவனண்டை ஓடிவந்து என்னவென்று விசாரித்தார்கள். அவனே முன்போலவே அலறிப்பதறி ஓலமிட்டுக் கத்தினுனேயொழிய வேறெதுவும்கூற மறுத்துவிட்டான். உடனே அவனுடைய பெற்ருேர் குருவானவரை அழைப்பித்தார்கள். குருவானவர்வந்து அவனுக்குத் தம்மாலான மட்டும் வெகுஅன்போடு ஆறுதலான வார்த்தைகள்சொல்லி அவனுடையபாவங்களுக்காக அவனைமனஸ்தாபப்படும்படி கூறினுர். அப்போது அந்த நிர்ப்பாக்கியவாலிபன் சொல்லிலடங்காத பயப்பிராந்தியால் வெருண்டு வெருண்டு விழித்து, "என்னைக் கெடுத்தவனுக்கு ஐயோ கேடு! நான் கடவுளைப்பிரார்த்திப்பதில் பிரயோசனமில்லை; இதோ! என்னை விழுங்க நரகத்தின்வாயில் திறந்திருக்கிறது" என்று கதறினுன். இப்பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டுச் சூழநின்றவர்கள் பதைபதைத்து அவனைப்பார்த்து, "தம்பி, அவநம்பிக்கைப் படாதே; கடவுளுடைய இரக்கம் அளவற்றது; அவரை மன்ருடு; அவர் உன்னைக் கைவிடமாட்டார்" என்று தேற்றரவு சொல்லி அழுது பிரலாபித்தார்கள். அவனே முகத்தைத் திருப்பிக்கொண்டு முன்போலவே துடிதுடித்துக் கதறியழுது அவநம்பிக்கையால்மாண்டான்.

ஆ! என்ன பயங்கரமான மரணம்! பிடிவாதமாய்த் தங்கள் பாவாக்கிரமங்களைவிடாதிருக்கும்காமாதுரருக்குக் கிடைக்கும் கதிஇதுவே. கெட்ட சகவாசத்தால் வரும் இலாபம் இதுவே.

ஆ! அன்பான சகோதர, சகோதரிகளே, கெட்டதோழர்களே! ஆட்டுத் தோலைப்போர்த்த ஓநாய்கள், நயவஞ்சகம்நிறைந்த பஞ்சமாபாதகர்கள், புன்சிரிப்பும், இன்சொல்லும், கண்சிமிட்டுமாய் அவர்கள் உங்கள் கற்பைக் கவர்ந்து, உங்கள்ஞான உயிரைப் பறிக்கத்தேடும்போது, நீங்கள் ஒருபோதும் மோசம்போகாது, வேங்கை, வரிப்புலிமுதலியதுஷ்டமிருகங்களைக் கண்டால் நாங்கள்எப்படி ஓடுவோமோ அப்படியே துட்டர்களைக்கண்டாலும் அவ்விடத்தைவிட்டு அகன்றுவிடுங்கள்.

பிள்ளைகளே! "கெட்ட சகவாசம் கற்பின் பிராணசத்துரு"

"கெட்ட நாடகசாலை மோகபாவத்தின் பாடசாலை."

"கற்பைக் காப்பாற்றச் செபம்அவசியம்." திவ்விய சற்பிரசாதம் கற்பைக் காப்பாற்றும் பரமஔடதம்.

எஸ். பி. அருளப்பு,
சென் ஜேம்ஸ் பாடசாலை,
இளவாலை.

—( )—

## ஒத்திகை

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

ஒரு கதையெழுத வேண்டுமென்ற ஆசை உந்தவே, கடதாசி, பேனுசகிதமாய் ஓர்மேசைமுன் இருந்தநாற்காலியில் உட்கார்ந்தேன். ஆனுல், என்ன எழுதுவதென்று சிந்தித்தேன், சிந்தித்தேன், பலமுறை சிந்தித்தேன்! பயனில்லை. அன்று என் மனுேநிலை இடந்தரவில்லை.

அவ்வேளையில் எங்கள்வீட்டுக்கு ஒருவர் வந்தார். அவரொரு பிரபல எழுத்தாளனில்லையென்ருலும், பல துறைகளிலும் பழுத்த ஓர் அனுபவஸ்தர். அவர் என்னைப்பார்த்து: "என்ன தம்பி, பலமானயோசனை செய்கிருய்?" என்று கேட்டார். நானெரு அசட்டுச்சிரிப்பை அவிழ்த்துவிட்டவனுக, "ஒன்றுமில்லை" என்றேன். "எதுவானுலும் சும்மா சொல்லு, என்னுல்முடிந்தால் உதவி செய்கிறேன்" என்று என்னைத் தட்டிக் கொடுத்தார்.

"எங்களுடைய 'சத்தியவேத பாதுகாவல'னில் 'புனிதவீரர்' பகுதிக்கு ஒரு கதையெழுதலாமென்று உட்கார்ந்தேன். கொஞ்சம் ஓய்வும் கிடைத்தது. ஆனுல், மனுேநிலைதான் ஒத்துழைக்க மறுக்கின்றது" என்றேன்.

"நீரொரு பிரபல எழுத்தாளனுக வேண்டுமென்ற வாஞ்சைபோலிருக்கிறது. ஆனுல், எழுத ஓய்வுகிடைக்கும்பொழுது, மனுேநிலை சரிப்படுகிறதில்லை; மனுேநிலை சாதகமாய் இருக்கும் நேரங்களில் ஓய்வுகிடைப்பதில்லை; அப்படித்தானே?" என்ருர்.

"ஆமாம் ஐயா, நானெரு எழுத்தாளனுகவர முடியாமலிருப்பதற்கு இதுதான் காரணம்......"

"அப்படியென்ருல் நானெரு வழி சொல்லுகிறேன். நடைமுறையில் அதைப் பரீட்சித்துப்பார். முதலில் பிரபல எழுத்தாளர்களெழுதிய நூல்களையும், கதைகளையும் நிரம்பப்படி. அவர்களது படைப்புகளில் மின்னும் கருத்தழகு, கற்பனையலங்காரம், எழுத்துநடைகளைக் கூர்ந்து அவதானித்துக் கொள். எழுத்தில் உனக்கென்று ஒருதனிநடையை வகுத்துக் கொள். சிலநாட்களுக்கு மனுேநிலை உதவி புரிந்தாலுஞ்சரி, புரியாவிட்டாலுஞ்சரி இடைவிடாமல் தொடர்ந்து எழுது. (அப்படி எழுதுவதிற்தேறும் நல்ல படைப்புகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவை. ஆனுல், அவைகள் பிரசுரமாகவில்லையே யென்று மட்டும் சோர்வடைந்து விடாதே.) அப்படி அடிக்கடி எழுதும்பொழுது மனுேநிலை உன்வசமாகிவிடும். எந்நேரமும் எடுத்துக்கொண்ட விஷயத்தை அழகாக எழுதுவதற்கு மனுேநிலையை வசப்படுத்திக்கொண்டால் — பின் மனுேநிலையின் தயவைஎதிர்பார்த்துத் தயங்கவேண்டியதில்லையல்லவா? உமது குருவானவர் அல்லது ஆசிரியர் தெரிவுசெய்து தரும் நூல்களையே முதலில் வாசிக்கவேண்டும். அவர்கள் உமது அறிவிற்கும், திறமைக்கும், நெஞ்சுறுதிக்கும் ஏற்ற நூல்களையே சிபாரிசுசெய்வார்கள்.

"சரி நீ இப்பொழுது கதையெழுதுவதற்கு ஒருசம்பவம் சொல்லுகிறேன். எனதுபால்யவயதில் நிகழ்ந்த அந்தச் சுவாரஸ்யமான சம்பவத்தைச் 'சிறுகதை'ப் பாணியிலேயே கூறுகிறேன். இடையில்ஏன், எதற்கு என்று கேளாமலும், பயப்படாமலும், 'ஐயோ இந்தக்கதை வேண்டாம்' என்று வெறுக்காமலும் நுட்பமாய்க் கதையை அவதானித்துக் கொள்" என்று தனது திட்டங்களை விளக்கியபின் கதையைப் பின்வருமாறு கூறலாயினர்.

"ஒருநாள் என்தந்தையார் வெளியில்சென்று வீட்டுக்குத் திரும்பும்பொழுது இன்னெருவரையும் தன்கூட அழைத்து வந்தார். இருவரும் சற்றுநேரம் அன்னியோன்னியமாக உரையாடிக்கொண்டிருந்தனர். திடீரென இருவரும் எழுந்துநின்று உரத்தகுரலில் வாக்குவாதம்பண்ணிச் சண்டையிட்டார்கள். பின்னர் ஒருவரோடொருவர் முட்டிமோதி

விழுந்துபுரண்டார்கள். அவ்வேளை என் தந்தையெழுந்து வீட்டிற்குள் சென்று கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்துவந்து அந்தஆளைச் சுட்டுவிட்டார். உடனே அந்தஆள் வேரற்ற மரம்போல நிலத்தில் விழுந்தார். வாய்க்குளிருந்து 'குபுகுபு'வென இரத்தம் கொட்டியபடியிருந்தது. என் தந்தையிடம் கெஞ்சும்பாவனையில் அந்தஆள் ஏதேதோபேசினர். எனக்கோ பார்க்கப் பரிதாபமாயிருந்தது. ஆனால், சிலநிமிஷத்தின்பின் அந்த ஆள் இறந்துவிட்டார். அவர் இறந்ததைக்கண்ட என் தந்தை மிரள மிரள விழித்தார். நானே பயத்தினல் கற்சிலையாகிவிட்டேன்.

"ஆச்சரியம்! பின்னும் சிலநிமிஷங்களின்பின் இறந்துபோன அம்மனிதர் துள்ளிக்குதித்தவாறு எழுந்தார். அப்பாவும், அவருஞ்சேர்ந்து 'பிரமாதம், பிரமாதம்' என்று சிரித்து மகிழ்ந்தனர். பின் அந்த மனிதர் போய்விட்டார். அவர் போனபிறகு என் தந்தையிடம் விஷயத்தை விசாரித்தேன்."

"அது நாங்கள் நடிக்கப்போகும் நாடகத்திலுள்ள ஒருகட்டத்தை ஒத்திகை நடத்தினேம். மகனே, இந்தக் கைத்துப்பாக்கியால் சுட்டால் சப்தம் மாத்திரம் கேட்குமேயன்றி, குண்டுபாய்ந்து ஆளுக்கு அபாயம் விளைவிக்காது. ஆளைக் கொல்லும் 'துப்பாக்கி' வேறுஇருக்கிறது. உருவத்தில் அதுவும் இதைப்போலத்தான் இருக்கும்" என்று என் தந்தை கூறினர்.

(தொடரும்)

---

## தொண்ணூற்றெரு அடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் வருகையின்போதும், நகரினூடாகஅதன்மகா ஊர்வலத்தின்போதும் லிஸ்பன்பட்டணம் ஓர் மகோற்சவநாளாகக் காட்சியளித்தது. ஊர்வலவீதிகளிலுள்ள ஒவ்வோர்மனையும் தேசோமயமாய் அலங்கரிக்கப்பெற்று, ஒவ்வோர் சன்னலிலும் மெழுகுவர்த்திகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ராகுஸ்நதியினூடாகத் திருச்சுரூபத்துடன் வள்ளங்களின் ஊர்வலமொன்றும் நடைபெற்றது. எழு யுத்தக்கப்பல்கள் அவற்றிற்கு ஓர் தொடர்வழியை ஆக்கிநின்றன. ஞாயிறன்று பிரமாண்டமான கிறீஸ்துஇராசாசுரூப ஞாபகசின்னத்தின் அடியிலே அமைக்கப்பட்டுள்ள சிற்றாலயத்துக்கு இத்திருச்சுரூபம் கொண்டுசெல்லப்பட்டது.

ஆரம்ப திருவைபவங்களின் போது கருதினல் செறெஜெய்ரு ஆண்டவர் போர்த்துக்கால் யேசுவினதும், மரியாயினதும் திருஇருதயங்களுக்குநேர்ந்து அர்ப்பணஞ்செய்பவராயினர். அப்போது சொல்லப்பட்ட செபத்திலே, அங்கு சமூகமாயிருந்த மாபெரும் மக்கள்குழாம் கலந்துகொண்டது. அதுநிகைடயில் ஆகாயவிமானங்கள் மலர்மாரி சொரிந்தவண்ணம் தாழப்பறந்தன. அத்தருணம் பரிசுத்தபிதா அனுப்பிவைத்த ஓர் செய்தியிலே, போர்த்துக்காலுக்குத் தமதுநரிகளைஒன்றின்போது, இந்தச்சுரூபம் அமைக்கப்படுவதைத் தாம் கண்டதாகவும், அது "போர்த்துக்கால் முழுவதும் கிறிஸ்துஇராசாமட்டிலேயே காண்டுள்ள அன்பிற்குஞாபகச்சின்னமென்று" என்றும் கூறலாயினர்.

சுரூபத்தின் ஆதாரபீடமானது நான்குகுழாய்த்தூண்களால் ஆக்கப்பட்டுள்ளது. இவைகளில் அமைந்துள்ள மேலேஸ்தூக்கிச் செல்லும் கருவிகள் தரிசகர்களை லிஸ்பன் தலைநகருக்கும், ராகுஸ் நதிக்கும் மேலாகத்தோன்றும் மேற்தளங்களுக்குக் கொண்டு செல்லுகின்றன. கங்கிறீற்றினல் செய்யப்பட்ட இந்தவாக்குத்தத்த ஞாபகசின்னத்தைப் பூர்த்திசெய்ய ஏழுவருடங்கள் பிடித்தன. இரவிலே ஆகாயவிமானங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்கதாய் இது தீபாலங்காரம் செய்யப்பட்டுவருகிறது.

---

## அர்ச். மரியகொறெற்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானது "அர்ச். மரியகொறெற்றியின் வேதசாட்சியத்துவ தலம்" என்ற மாபிள்கல்வெட்டு ஒன்றல் அடையாளமிடப்பட்டிருக்கிறது. அவள் காயமுற்றுவிழுந்த அறையிலே ஓர்பலிபீடமும் இருக்கின்றது. இந்த மனைமுழுவதும் தற்போது சிலகன்னியாஸ்திரிமாரின் கண்காணிப்பிலே இருக்கின்றது. நாம்அங்கேஇருந்தபொழுது மரியகொறெற்றியின் வயதுள்ள அநேக பெண்பிள்ளைகளைக் கண்டோம், அவர்களைக் கண்டபொழுது அத்தகைய சூழ்நிலைகளிலே ஓர்காலம் வசித்திருந்தபொழுது இளவயதுடைய மரியா எப்படி இருந்தாளென்று நாம் மனேபாவனைசெய்யக் கூடியவர்களானேம். அத்தகைய நொய்மையான இளவயதிலே அவளின்மரணத்தால் அந்த இடம் புனிதமாக்கப் பட்டிருக்கிறது.

நமது பரிசுத்தமாதாவாகிய கத்தோலிக்கதிருச்சபை இந்தஅருமையானபிள்ளையின் வீரத்துவ பரிசுத்ததனத்தை அங்கீகரிப்பதற்குக்காலந்தாழ்த்தவில்லை. அவளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. கடைசியாகப் பரிசுத்தவருடமாகிய 1950-ம் ஆண்டு ஆனிமாதம் 24-ந்திகதியன்று நமதுபாக்கியமான ஞாபகத்துக்குரிய 12-ம்பத்திநாதபாப்பானவரால் ஓர் வேதசாட்சியாக அவள் ஞான ஆடம்பர வைபவங்களுடன் அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டப்பெற்றுள். அர்ச்சியசிட்டபட்டம் சூட்டும் இந்த ஆடம்பர திருவைபவங்களின் போது மரியாயின்தாயான சிஞ்ஞோறு அசுந்தா கொறெற்றியும் ஐந்துலட்சம் மக்களைக்கொண்ட மாபெருஞ்சனத்திரளுடன் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் சமூகமாயிருந்தாள். இவ்வாறகத் தனதுபிரியமகளின் சோககரமான பாதகமரணத்தாலே ஓர் ஏழைத்தாய் அடைந்தபெருந்துயரமானது, தற்சமையம் பரகதியில் ஓர்அர்ச்சியசிட்டவளாகத் திகளும் மரியகொறெற்றியான அதேபுதல்விக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதாகிய மனதை உருக்கி மயிர்சிலிர்க்கச் செய்யும் திருவைபவத்தாலே மனேவாக்குக்கெட்டாத சந்தோஷகரமாக மாறுவதாயிற்று.

---

### நன்றியறிந்த தோத்திரம்

புதுமை வரமிக்க அந்தோனியாரிடமும், பூதாததேவபுவிடமும் நான் கேட்டுக்கொண்ட வரம் குறிப்பிட்ட காலத்தில் எனக்குக் கிடைத்ததினல் அவர்களுடைய மகிமை விளங்க எனது நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

தேத்தாப்பளை, மாம்புரி. J. L. Fernando

---

## கோட்டு விற்பனவு

## விளம்பரம்

**இல. M. B. 2314**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

வண்ணர்பண்ணை தென்மேற்கு நடராசா கனகசபாபதி — வழக்காளி.

எதிராக

வண்ணர்பண்ணை கிழக்கு

1. ஆறுமுகம் இரத்தினம்
2. சுப்பிரமணியம் கனகசபை (சிறுப்பர் கந்தோர்)

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2314-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1959-ம் ஆண்டு ஆடிமீ 15-ம் உ (15-7-59) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்கக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.


தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5730/-ம் இன்னும் ரூபா 5000/-த்திற்கு 3-7-58 தொடக்கம் 9-9-58 வரையும் 100க்கு 12% வட்டியும், பின்பு கூட்டுத்தொகை இறுபடும்வரைக்கும் 100 க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு 235 ரூபா 44 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி, மட்டுவில் கோவிற்பற்று மட்டுவில் தெற்கு இறை வீறற்கேணி வளவு ப. கி. இ. 24. எல்லை: கிழக்கும்—வடக்கும்—ஒழுங்கை. மேற்கு—றேட்டு. தெற்கு—வீறற்கேணி கந்தசாமி கோவில் உற்சவவீதி. இதில் சொரியலாய் நாலில் மூன்று பங்கும். முற்பதிவு இல. F. 309/222.

**தா. செல்லையா,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 1-6-59.

---



## திருமதி பேதுருப்பிள்ளை பிருன்சீஸ்காவின்

### முதல்வருட

### மரண ஞாபகம்

இறப்பு: 15—6—1958

எங்கள் மனதை விட்டகலாத நேச மனைவியும், அருமைத் தாயாருமாகிய பிறுன்சீஸ்கா இம்மண்ணுலக வாழ்வை நீத்து, தன் ஆன்மாவை ஆண்டவன் பாதத்தில் அர்ப்பணித்த முதலாம் வருட ஞாபகம் 15-6-59 ல் பூர்த்தியாகிறபடியால் இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். சந்நியாசிகளே, இனசன சிநேகிதர்களே, கிறீஸ்தவர்களே இவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு உங்களை விண்ணப்பமாய் வேண்டுகின்றோம். அன்று பண்டத்தரிப்பு பத்திமாகிரியில் இவரின் ஆன்மசாந்தியடையத் தூக்கப் பூசை நடந்தேறும். இவரை இழந்து துன்புறும்

கணவன்: **ச. பேதுருப்பிள்ளை**
பிள்ளைகள்: **பே. மரியநாயகம்**
**பே. அமிர்தநாயகம்**
**பே. ஞானத்துநாயகம்**
**பே. மேரிறெஜினு**
**பே. ரேஸ்மேரி**

செம்பியன்பற்று.

---

## கோட்டு விற்பனவு

## விளம்பரம்

**இல. M. B. 925**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

புகருடுதீவு தற்பொழுது நீர்வேலியிலிருக்கும் ஆறுமுகம் குமலிங்கம் —வழக்காளி.

எதிராக

நாவற்குளி

1. வயிரமுத்து வீரகத்தியும்,
2. பெண் குசம்மாவும் யாழ்ப்பாணம், செம்மாதெரு
3. M. செயயது ரவுதர் புகாரி ரவுதர்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 925-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1959-ம் ஆண்டு ஆடிமாதம் 14-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 850. கோட்டுச்செலவு ரூபா 6 (வெலியாத்துச் செலவு)

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி. நாவற்குளி கோயிற்பற்று நாவற்குளிஇறை "காயினி புலம்" பர. நில. இலா. ஒன்றரை (ப. நி. இ. $1\frac{1}{2}$). எல்லை: கிழக்கு— செல்லையா பெண் அன்னம்மாவுடைய ஆதனம். வடக்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் அன்னப்பிள்ளையுடைய ஆதனம். மேற்கு — சின்னப்பு பொன்னையாவுக்கும், மறு பேருக்கும் உரியஆதனம். தெற்கு— சின்னப்பு மன்னருக்குரிய ஆதனம். இதடங்கலும். பதியப்பட்ட இல. F294/206.

2. ஷெஇறை "காயினி திடல்புலம்" பர. நில. இலா. பத்தேமுக்கால் (ப. நி. இ. $10\frac{3}{4}$). எல்லை: கிழக்கு— ஒழுங்கை. வடக்கு— றேட்டு. மேற்கும், தெற்கும்— சம்பையா முத்துத்தம்பியுடைய ஆதனம். இதில் சொரியலாய் 301/387 பங்குகளும், காணியில் இருக்கும் வீட்டில் முழுப்பங்கும். பதியப்பட்ட இல. F294/207.

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனர்.

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
5-6-59

---

### நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயஇராசாவின் இரக்கத்தாலும், எங்கள்குடும்பத்தின் அடைக்கலமும், பாதுகாவலுமாகிய பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டாலும் எங்கள்மகள் ஆசிரிய கலாசாலைப் பயிற்சிமுடிந்து, சேமமாகத் தொழிலில் சேர்ந்ததற்கும், மகன் எஸ். எஸ். சி பரீட்சையில் சித்திபெற அருள்புரிந்ததற்கும் நன்றிகூறுகிறேன். இன்னும் எங்களுக்குப் புரிந்துவரும் அநேக இகபரநன்மைகளுக்காகவும், மற்றும் எங்கள்மன்றாட்டுகளைக்கேட்டுக் கருணைகூர்ந்ததற்காகவும் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். "ஓ, இரக்கமுள்ள தாயாரே! உமது கருணையையும், இரக்கத்தையும் பூலோகமெங்கும் பொழிந்தருளும்"

மாதாவின் நன்றியுள்ள அடியாள்.

---

மூன்றும் நூற்றாண்டிலே வலேரியான் சக்கிரவர்த்தியின் ஆட்சிகாலத்தில் வேதசாட்சியானவர்களின் ஞாபகார்த்தமாகவும், இத்தாலிய அரசாங்கத்துக்கும், பரிசுத்தஸ்தானத்துக்குமிடையே லத்தறன்உடன்படிக்கை கைநிறைவேறிய 30-ம்ஆண்டுநிறைவின் ஞாபகார்த்தமாகவும் வத்திக்கான் இரு புதியஇனத் தபால்முத்திரைகளைச் சென்றவைகாசிமாசத்திலே பாவனைக்கு விடுத்திருக்கின்றது.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 11-1959.